©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை: ரூ. 23.20 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 4] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 4, 2009
தை 22, திருவள்ளுவர் ஆண்டு–2040

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்ட எண் 47/2008**

***1951–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் ஐம்பது ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1. (1)** இந்தச் சட்டம், **2008–ஆம்** ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**(2)** இது, **2008–ஆம்** ஆண்டு ஏப்ரல் திங்கள் **1–ஆம்** நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் XX/1951. **2.** (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) **1951–ஆம்** ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் **3–ஆம்** பிரிவில்,— 3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**(1). (1)–**ஆம் உட்பிரிவில், ‘‘திங்களொன்றுக்கு ஏழாயிரம் ரூபாய்கள்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘திங்களொன்றுக்கு எட்டாயிரம் ரூபாய்கள்’’ என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**(2) (2)–**ஆம் உட்பிரிவில், ‘‘திங்களொன்றுக்கு எட்டாயிரம் ரூபாய்கள்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘திங்களொன்றுக்கு பத்தாயிரம் ரூபாய்கள்’’ என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**(3) (3)–**ஆம் உட்பிரிவில்,—

(a). (a)**–**எனும் கூறில், ‘‘திங்களொன்றுக்கு மூவாயிரம் ரூபாய்கள்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘திங்களொன்றுக்கு நான்காயிரம் ரூபாய்கள்’’ என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(b). (b)**–**எனும் கூறில், ‘‘திங்களொன்றுக்கு நான்காயிரம் ரூபாய்கள்’’ என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘திங்களொன்றுக்கு ஐயாயிரம் ரூபாய்கள்’’ என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் **4–**ஆம் பிரிவில்,—

**(1). (1)–**ஆம் உட்பிரிவில், ''திங்களொன்றுக்கு ஏழாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''திங்களொன்றுக்கு எட்டாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**(2). (2)–**ஆம் உட்பிரிவில், ''திங்களொன்றுக்கு ஏழாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''திங்களொன்றுக்கு எட்டாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**(3). (3)–**ஆம் உட்பிரிவில், ''திங்களொன்றுக்கு எட்டாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''திங்களொன்றுக்கு பத்தாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**(4) (4)–**ஆம் உட்பிரிவில்,—

**(1). (a)–**எனும் கூறின்,—

**(a).** (i) எனும் உட்கூறில், ''திங்களொன்றுக்கு மூவாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''திங்களொன்றுக்கு நான்காயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**(b).** (ii) எனும் உட்கூறில், ''திங்களொன்றுக்கு நான்காயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''திங்களொன்றுக்கு ஐயாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**(2). (b)–**எனும் கூறில்,—

**(a). (i)–** எனும் உட்கூறில், ''திங்களொன்றுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''திங்களொன்றுக்கு மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**(b). (ii)–**எனும் உட்கூறில், ''திங்களொன்றுக்கு நான்காயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''திங்களொன்றுக்கு ஐயாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

6–A எனும் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தில் **6–A** எனும் பிரிவில்,—

**(1). (1)–**ஆம் உட்பிரிவில், ''திங்களொன்றுக்கு ஏழாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''திங்களொன்றுக்கு எட்டாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**(2). (2)–**ஆம் உட்பிரிவில், ''திங்களொன்றுக்கு ஏழாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''திங்களொன்றுக்கு எட்டாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**(3). (3)–**ஆம் உட்பிரிவில், ''திங்களொன்றுக்கு எட்டாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''திங்களொன்றுக்கு பத்தாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**(4). (4)–**ஆம் உட்பிரிவில்,—

**(a). (i)–**எனும் கூறில், ''திங்களொன்றுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''திங்களொன்றுக்கு மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**(b). (ii)–**எனும் கூறில், ''திங்களொன்றுக்கு நான்காயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''திங்களொன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் **12–**ஆம் பிரிவில்,—

**(1). (1)–**ஆம் உட்பிரிவில்,—

**(a)–**எனும் கூறில், ''திங்களொன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''திங்களொன்றுக்கு மூவாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**(2). (1–A)–**எனும் உட்பிரிவில், ''திங்களொன்றுக்கு ஆறாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''திங்களொன்றுக்கு ஏழாயிரம் ரூபாய்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(3). (1–AA)–எனும் உட்பிரிவில், "திங்களொன்றுக்கு நான்காயிரம் ரூபாய்கள் தொகுதிப்படியொன்றும் திங்களொன்றுக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்கள் அஞ்சல் படியொன்றும்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "திங்களொன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாய்கள் தொகுதிப்படியொன்றும், திங்களொன்றுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்கள் அஞ்சல் படியொன்றும்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(4). (4–B)–எனும் உட்பிபிரிவில், "திங்களொன்றுக்கு நான்காயிரம் ரூபாய்கள்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "திங்களொன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாய்கள்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

6. முதன்மைச் சட்டத்தின் 12–B-எனும் பிரிவில்,– 12–B எனும் பிரிவிற்கான திருத்தம்.

(1). (1)–ஆம் உட்பிரிவில், "திங்களொன்றுக்கு ஏழாயிரம் ரூபாய்கள்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "திங்களொன்றுக்கு எட்டாயிரம் ரூபாய்கள்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(2). (2–C)–எனும் உட்பிரிவில், "திங்களொன்றுக்கு மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய்கள்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "திங்களொன்றுக்கு நான்காயிரம் ரூபாய்கள்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(3). (2–CC)–எனும் உட்பிரிவில், "திங்களொன்றுக்கு மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய்கள்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "திங்களொன்றுக்கு நான்காயிரம் ரூபாய்கள்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி.)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் பொதுத் தகவலுக்காக இதன்முலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 48/2008**

***மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்கும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் சொத்துக்களுக்குச் சேதம் அல்லது இழப்பு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கும் மற்றும் அவற்றோடு தொடர்புடைய மற்றும் இடைவிளைவான பிறபொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்குமானதொரு சட்டம்.***

இம் மாநிலத்தில் மருத்துவச் சேவை என்பதான பணிகளுக்கு முழுமையான அளவில் இடையூறு ஏற்படும் விளைவை உண்டாக்குகிற வகையில் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு இடையே பதட்டத்தை உருவாக்கி மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களின் வாழ்க்கைக்கு ஊறு அல்லது அபாயம் விளைவிக்கின்ற மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் சொத்துக்களுக்குச் சேதத்தை அல்லது இழப்பை ஏற்படுத்துகின்ற வன்முறைச் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன என்பதாலும்;

மேலும், பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய மற்றும் பிணையில் விடாக் குற்றமாக அக்குற்றத்தை ஆக்குவதன் மூலம், வன்முறை செய்கின்ற நபர்களைத் தண்டிப்பதும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு அல்லது இழப்பிற்கு, நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படவேண்டிய இழப்பீட்டினை வழங்குவதும் தேவையானதாகியிருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2008–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,—

(1) ''மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனம்'' என்றால் நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்குவதற்கான வசதிகளைக் கொண்டிருக்கிற மற்றும் அவர்களை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது அவர்கள் தங்குவதற்குப் பயன்படுத்தப்படும் வசதிகளைக் கொண்டிருக்கிற தனியார் மருத்துவமனை எதுவும் உள்ளடங்கலான, மாநில அல்லது மைய அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்ற, மக்களுக்கு மருத்துவப் பாதுகாப்பினை வழங்குகிற நிறுவனம் எதுவும் எனவும், குழந்தை பிறப்பது தொடர்பான பிரசவம் மற்றும் பிரசவத்திற்கு முன்னதாக மற்றும் பிரசவத்திற்குப் பின்னர் கொடுக்கப்படவேண்டிய மருத்துவப் பாதுகாப்பின் நோக்கத்திற்காக வழக்கமாக பெண்கள் ஏற்கப்பட்டு இடமளிக்கப்படுகிற அல்லது அதனோடு தொடர்புடைய பிற எதற்குமான தனியார் மகப்பேறு இல்லம் என்றும் மற்றும் உடல் தொடர்பான அல்லது மனம் தொடர்பான நோய், காயம் அல்லது நலிவு எதனாலும் பாதிக்கப்பட்ட நபர்களை ஏற்று இடமளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும் மற்றும் நோயாளிகளைப் பேணிக்காத்து சிகிச்சையை வழங்குவதற்கான அல்லது இவ்விரண்டையும் செய்கின்ற தனியார் செவிலியர் இல்லம் எதுவும் என்றும் பொருள்படும்; மற்றும் அது மகப்பேறு இல்லம் அல்லது நோயாளிகள் நல இல்லம் ஒன்றை உள்ளடக்கும்.

(2) மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனம் ஒன்று தொடர்பாக ''மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்'' என்றால், அத்தகைய மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டு பணியாற்றுகிற,—

(a) (தற்காலிகப் பதிவு பெற்றுள்ள நபர் ஒருவர் உள்ளடங்கலான) பதிவுபெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர்களையும்,

(b) பதிவுபெற்ற செவிலியர்களையும்,

(c) மருத்துவ மாணவர்களையும்,

(d) செவிலியர் மாணவர்களையும்,

(e) துணைமை மருத்துவப் பணியாளர்களையும் உள்ளடக்கும்.

(3) ''சொத்து'' என்றால் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர் ஒருவரால் அல்லது மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனம் ஒன்றினால் சொந்தமாக வைத்து வரப்படும் அல்லது அனுபோகத்தில் வைத்து வரப்படும் அல்லது கட்டுப்பாட்டில் வைத்து வரப்படும் அசையும் அல்லது

அசையாச்சொத்து அல்லது மருத்துவக் கருவி அல்லது மருத்துவ இயந்திர சாதனம் எதுவும் எனப் பொருள்படும்.

(4) ''வன்முறை'' என்றால் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தில் தமது பணியை ஆற்றுகையில் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர் எவருக்கும் ஊறு, காயம் அல்லது உயிருக்கு அபாயம் அல்லது அச்சுறுத்தல் அல்லது தடை அல்லது இடைஞ்சல் விளைவிக்கிற அல்லது சொத்துக்கு இழப்பு அல்லது சேதம் விளைவிக்கிற செயற்பாடுகள் எனப் பொருள்படும்.

வன்முறையைச் செய்வதற்கான தண்டனை,

3. தாமாகவோ அல்லது நபர்களின் குழு அல்லது நிறுவனம் ஒன்றின் உறுப்பினர் ஒருவராகவோ அல்லது தலைவர் ஒருவராகவோ, வன்முறைச் செயல்பாடு எதனையும் செய்கிற அல்லது செய்வதற்கு முயற்சி செய்கிற அல்லது அதனைச் செய்வதற்கு உதவி செய்கிற அல்லது அதனைத் தூண்டிவிடுகிற நபர் எவரும் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத ஆனால் பத்து ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடியதொரு கால அளவுக்கான சிறை தண்டனையுடன் பண தண்டனையும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

குற்றச் செயலை விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளுதல்.

4. 3–ஆம் பிரிவின்படி செய்யப்பட்ட குற்றச்செயல் எதுவும் பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய குற்றமாகவும் பிணையில் விடாக்குற்றமாகவும் இருத்தல் வேண்டும்.

சொத்துக்கு ஏற்பட்ட சேதத்திற்கான அல்லது இழப்பிற்கான இழப் பீட்டினைச் செலுத்துவதற் கான கடப்பாடு.

5. (1) (3)–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தண்டனைக்கும் கூடுதலாக அந்நபர், நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறு, சொத்துக்கு ஏற்பட்டுள்ள சேதத்திற்கான அல்லது இழப்பிற்கான இழப்பீட்டினைச் செலுத்துவதற்குக் கடமைப்பட்டவராதல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படியான இழப்பீட்டினை அந்நபர் செலுத்தவில்லையானால், மேற்சொன்ன தொகையானது, 1864–ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வசூலிப்புச் சட்டத்தின் வகைமுறைகளின்கீழ், ஒரு நில வருவாய் நிலுவையைப்போலக் கருதப்பட்டு, வசூலிக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 11/1864.

ஒரு சில நடவடிக் கைகளுக்குத் தடை.

6. மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபரால் அல்லது மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தினால், 1992–ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து(சேதம் மற்றும் இழப்பினைத் தடுத்தல்) சட்டத்தின்கீழ், அதிகார அமைப்பு எதன் முன்பும் சொத்துக்கு ஏற்பட்ட சேதம் அல்லது இழப்பிற்கான இழப்பீட்டிற்குக் கோரிக்கை எதுவும் செய்யப்படுதல் கூடாது.

தமிழ்நாடு சட்டம் 59/1992.

பிற சட்டங்களின் செயற்பாடு பாதிக்கப் படலாகாது எனல்.

7. இந்தச் சட்டத்தில் பிறவாறு வகைசெய்யப்பட்டுள்ளவாறு அல்லாமல், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருக்கவேண்டுமின்றி, அதற்குக் குந்தகம் விளைவிப்பதாக இருத்தல் கூடாது.

நீக்கமும் காப்பும்.

8. (1) 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கப்படுகிறது.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2008.

(2) அவ்வாறு நீக்கப்பட்டு இருக்கின்றபோதும் மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டு இருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி.)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 49/2008**

## *2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.*

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (இரண்டாம் திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2008–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 32/2006.

**2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் 3–ஆம் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது,—

"(4) (a) (2)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், ஆனால் (1)–ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு, வரி விதிக்கத்தக்க பொருள்களைப் பொறுத்த அளவில், ஆண்டொன்றுக்கு ஐம்பது இலட்சம் ரூபாய்க்குக் குறைவாக விற்பனைத் தொகையாகப் பெற்றிருக்கிற, இம்மாநிலத்திற்குள்ளாகக் கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களை வைத்து இரண்டாம் மற்றும் அதற்கடுத்த விற்னைகளைச் செய்கிற வணிகர் ஒவ்வொருவரும், தனது விருப்பத் தேர்வின்படி (2)–ஆம் உட்பிரிவின்படி வரி செலுத்துவதற்குப் பதிலாக, ஒவ்வொரு ஆண்டும் வரிவிதிக்கத்தக்க பொருட்களைப் பொறுத்த அளவில் அவர்தம் விற்பனைத் தொகையின்மீது அரசினால் அறிவிக்கை செய்யப்படக்கூடியவாறான நூற்றுக்கு ஒரு விழுக்காட்டுக்கு மேற்படாத அத்தகைய வீதத்தில் வரியொன்றைச் செலுத்தலாம். அத்தகைய விருப்பத் தேர்வானது வணிகர் ஒருவரால் பின்வரும் முறையில் செலுத்தப்படுதல் வேண்டும்,—

(i) வணிகத்தைத் தொடங்குகிற வணிகர், அவ்வணிகத்தைத் தொடங்கிய தேதியிலிருந்து முப்பது நாள்களுக்குள்ளாக;

(ii) முந்தைய ஆண்டின்போது வரிவிதிக்கத்தக்க பொருள்கள் தொடர்பாக ஐம்பது லட்சம் ரூபாய்க்கும் குறைவான விற்பனைத் தொகையைப் பெற்றிருக்கிற வணிகர், எந்த ஆண்டுக்கு அந்த வணிகர் அத்தகைய விருப்பத் தேர்வினைச் செலுத்துகிறாரோ அந்த ஆண்டின் ஏப்ரல் திங்கள் 30–ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ;

(iii) 2008–2009–ஆம் ஆண்டைப் பொறுத்த வரையில், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து முப்பது நாள்களுக்குள்ளாக

**முதலாம் வரம்புரை:** ஆனால் அத்தைகைய வணிகர் வரி என்ற வகையிலோ அல்லது வரி என்பதாகப் புலப்படுகிறவகையிலோ தொகை எதையும் வசூலித்தல் கூடாது:

**இரண்டாம் வரம்புரை:** மேலும், அத்தகைய வணிகர் அவரால் கொள்முதல் செய்யப்பட்ட பொருள்களின் மீது உள்ளீட்டுவரி வரவு எதற்கும் உரிமைத்தகுதி உடையவராதல் கூடாது:

**மூன்றாம் வரம்புரை:** அதோடுகூட, அத்தகைய வணிகரிடமிருந்து பொருள்களை கொள்முதல் செயகிற வணிகர், அவரால் கொள்முதல் செய்யப்பட்ட பொருள்களுக்கு உள்ளீட்டுவரி வரவு பெறுவதற்கு உரிமைத் தகுதியுடையவராதல் கூடாது.

(b) ஓராண்டில் (a) எனும் கூறின்படி வரி செலுத்துகிற வணிகர் ஒருவரின் வரி செலுத்தத்தக்க பொருள்கள் தொடர்பான விற்பனைத் தொகையானது அந்த ஆண்டின்போது எந்த நேரத்திலும் ஐம்பது இலட்சம் ரூபாய் என்ற அளவை எட்டுமாயின், அவ்வாறு அந்த விற்பனைத் தொகையானது அந்த அளவை எட்டிய தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள், எழுத்துருவில் வரிக்கணிப்பு அதிகார அமைப்புக்குத் தெரிவித்தல் வேண்டும். அத்தகைய வணிகர் ஐம்பது இலட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட ரூபாய்க்கு செய்யப்பட்ட அவர்தம் அனைத்து விற்பனையின்மீது (2)–ஆம் உட்பிரிவின்படி வரி செலுத்தக் கடப்பாடுடையவராவார்; மற்றும் அவர் அத்தகைய விற்பனைத் தொகையானது ஐம்பது இலட்சம் ரூபாய் என்ற அளவை எந்த தேதியில் எட்டியதோ, அந்தத் தேதிக்கு முன்னதாக தொண்ணூறு நாட்களுக்குள்ளாக அதற்கான கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்ற நிலையில், அந்தத் தேதியிலிருந்து அவரால் செய்யப்பட்ட கொள்முதல்களின் பேரிலும், அவரிடம் உள்ள சரக்குகளின் பேரிலும் உள்ளீட்டு வரி வரவு பெற உரிமைத் தகுதியுடையவராவார்.

**வரம்புரை:** ஆனால், முந்தைய ஆண்டின்போது விரிவிதிக்கத்தக்க பொருள்களைப் பொறுத்த அளவில் ஐம்பது இலட்சம் ரூபாயை எட்டியுள்ள விற்பனைத் தொகையைப் பெற்றுள்ள அத்தகைய வணிகரானவர், பின்னர் உள்ள ஆண்டுகளுக்கு அத்தகைய விருப்பத் தேர்வினைச் செலுத்துவதற்கு உரிமைத் தகுதியுடையவராகமாட்டார்.

21–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 21–ஆம் பிரிவில் "இந்தச் சட்டத்தின்படி வரி செலுத்தக் கடப்பாடுள்ள வணிகர் ஒவ்வொருவரும்" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக "இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட வணிகர் ஒவ்வொருவரும்" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

87–Aஎனும் புதிய பிரிவினைப் புகுத்துதல்.

4. முதன்மைச் சட்டத்தின் 87–ஆம் பிரிவிற்குப் பின்னர், பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும் அதாவது:–

**87–A ஒரு சில நேர்வுகளில் விற்பனைக்கு வரிக்கணிப்பு செய்தல்.**—இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், 2006–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாள் முதல் 2006–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31–ஆம் நாள் வரையிலான கால அளவிற்கான வரிக்கணிப்பைப் பொறுத்த அளவில், 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டத்தின்படியான (தமிழ்நாடு சட்டம் 1/1959) அல்லது 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனைவரிச் சட்டத்தின்படியான (தமிழ்நாடு சட்டம் 14/1970) வணிகரொருவரின் வரிக் கணிப்பானது, அவரால் தாக்கல் செய்யப்பட்ட விவர அறிக்கையின் அடிப்படையில் இருத்தல் வேண்டும்; மற்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய விதிகளுக்கிணங்கிய வகையில் அத்தகைய விவர அறிக்கையானது ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.".

நீக்கமும், காப்பும்.

5. (1) 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டமானது, இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2008.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும் மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி.)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 50/2008**

***2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1. (1)** இந்தச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2008–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006.

**2.** 2006–ஆம் ஆண்டு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் இரண்டாம் இணைப்புப்பட்டியலில், அதன் (1)–ஆம் கலப்பத்தியில் 3–ஆம் இனத்திற்கு எதிராக உள்ள (2)–ஆம் கலப்பத்தியிலுள்ள பதிவுகளில், ''1934–ஆம் ஆண்டு இந்திய காப்புவரிச் சட்டம் (மையச் சட்டம் 32/1934)'' என்ற வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''1975–ஆம் ஆண்டு சுங்க வரிச் சட்டம் (மையச் சட்டம் 51/1975)'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். இரண்டாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 51/2008**

***2007–ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம் 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது 2008–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 33/2007.

நெடுந் தலைப்பிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2007–ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தின் நெடுந்தலைப்பில், "கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும்" என்னும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

1–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 1–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், "கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும்" என்னும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 2–ஆம் பிரிவில் (a) எனும் கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 3–ஆம் பிரிவில்,–

(1) ஓரத்தலைப்பில், "கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும்" என்னும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(2) "கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும்" என்னும் சொற்றொடரானது வருகின்ற இரண்டு இடங்களிலும், அது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(3) "மூன்றரை சதவீதம் மற்றும்" என்னும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(4) "முறையே" என்னும் சொல்லானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 4–ஆம் பிரிவில்,–

(1) "கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும்" என்னும் சொற்றொடரானது வருகின்ற இரண்டு இடங்களிலும் அது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(2) "மூன்றரை சதவீதம் மற்றும்" என்னும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(3) "முறையே" எனும் சொல்லானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

5–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**7.** முதன்மைச் சட்டத்தின் 5–ஆம் பிரிவில்,–

(1) "கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும்" என்னும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(2) "கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது" என்னும் சொற்றொடரானது வருகின்ற இரண்டு இடங்களிலும் அது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(3) "நேர்விற்கேற்ப" என்னும் சொல்லானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

நீக்கமும் காப்பும். **8. (1) 2008–**ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) திருத்த அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் **9/2008.**

**(2)** அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்ட எண் 52/2008.**

***1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** (1) இந்தச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டம் என வழங்கப் பெறும். [குறுந்தலைப்பும் தொடக்கமும்.]

(2) இது, 2008–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 6–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[குடியரசுத் தலைவரின் சட்டம் 25/1976.]

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1976–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனச்) சட்டத்தின், 4–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், “முப்பத்து இரண்டு ஆண்டுகள் இரண்டு திங்களுக்கு” என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, “முப்பத்து இரண்டு ஆண்டுகள் எட்டு திங்களுக்கு” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். [4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.]

[தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2008.]

**3.** (1) 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றது. [நீக்கமும் காப்பும்.]

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், இந்த அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மை சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்த சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மை சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத்துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்ட எண் 53/2008.**

***2008–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து மேலும் குறிப்பிட்ட சில தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகைசெய்வதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** இந்தச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டம் என வழங்கப் பெறும். குறுந்தலைப்பு.

**2.** மாநில அரசு, 2008–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவைபடுகிற மூவாயிரத்து ஐம்பத்தைந்து கோடியே முப்பத்து ஏழு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாததொரு தொகையை—

2008–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும் நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து துணை நிதி ஒதுக்கம் செய்தல்.

*(a)* இணைப்புப் பட்டியலின் (3)ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் வழங்கப்பட்ட துணை மானியங்களையும்;

*(b)* இணைப்புப் பட்டியலின் (4)ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத்தின் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்ட துணைச் செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

**இணைப்புப் பட்டியல்**

(2—ஆம் பிரிவைக் காண்க.)

| கோரிக்கை எண். | பணிகளும் நோக்கங்களும். | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல். | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது. | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது. | மொத்தம். |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | வருவாய் | 86,48,000 | ... | 86,48,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 3 | நீதி நிருவாகம் | வருவாய் | 4,000 | ... | 4,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | வருவாய் | 6,36,52,000 | ... | 6,36,52,000 |
| | | மூலதனம் | 3,23,01,000 | ... | 3,23,01,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 5 | வேளாண்மைத் துறை | வருவாய் | 45,39,50,000 | ... | 45,39,50,000 |
| | | மூலதனம் | 11,58,94,000 | ... | 11,58,94,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 12,64,48,000 | ... | 12,64,48,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 7 | மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 10,68,00,000 | ... | 10,68,00,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | வருவாய் | 3,88,49,000 | ... | 3,88,49,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 1,20,47,000 | ... | 1,20,47,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 143,13,90,000 | ... | 143,13,90,000 |
| | | மூலதனம் | 11,40,34,000 | ... | 11,40,34,000 |
| | | கடன் | 9,94,34,000 | ... | 9,94,34,000 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 194,84,64,000 | ... | 194,84,64,000 |
| | | மூலதனம் | 1,58,00,000 | ... | 1,58,00,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 14 | எரிசக்தித் துறை | வருவாய் | .. | .. | .. |
| | | மூலதனம் | 570,50,00,000 | ... | 570,50,00,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 15 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | வருவாய் | 24,25,000 | ... | 24,25,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |

| கோரிக்கை எண். | பணிகளும் நோக்கங்களும். | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது. | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| 16 | நிதித் துறை | வருவாய் | 1,26,38,000 | ... | 1,26,38,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 17 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 3,32,38,000 | ... | 3,32,38,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | 75,54,000 | ... | 75,54,000 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 32,11,000 | ... | 32,11,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | வருவாய் | 87,32,43,000 | ... | 87,32,43,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 20 | உயர் கல்வித் துறை | வருவாய் | 8,32,05,000 | ... | 8,32,05,000 |
| | | மூலதனம் | 2,84,00,000 | ... | 2,84,00,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 21 | நெடுஞ்சாலைகள் துறை | வருவாய் | 1,00,00,000 | ... | 1.00,00,000 |
| | | மூலதனம் | 2,34,24,000 | ... | 2,34,24,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 21,95,63,000 | ... | 21,95,63,000 |
| | | மூலதனம் | 4,000 | ... | 4,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 4,92,19,000 | ... | 4,92,19,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 25,60,000 | ... | 25,60,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 6,80,13,000 | ... | 6,80,13,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 26 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | வருவாய் | 593,99,63,000 | ... | 593,99,63,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 27 | தொழில் துறை | வருவாய் | 44,02,32,000 | ... | 44,02,32,000 |
| | | மூலதனம் | 2,63,38,000 | ... | 2,63,38,000 |
| | | கடன் | 5,29,38,000 | ... | 5,29,38,000 |

| கோரிக்கை எண். | பணிகளும் நோக்கங்களும். | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது. | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது. | மொத்தம். |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 1,07,80,000 | ... | 1,07,80,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | 5,43,42,000 | ... | 5,43,42,000 |
| 29 | சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | வருவாய் | 93,49,000 | ... | 93,49,000 |
| | | மூலதனம் | 1,03,50,000 | ... | 1,03,50,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | வருவாய் | 67,38,000 | ... | 67,38,000 |
| | | மூலதனம் | 15,00,00,000 | ... | 15,00,00,000 |
| | | கடன் | 36,35,00,000 | ... | 36,35,00,000 |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | வருவாய் | 65,85,000 | ... | 65,85,000 |
| | | மூலதனம் | 2,29,78,000 | ... | 2,29,78,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 33 | சட்டத் துறை | வருவாய் | 11,28,000 | ... | 11,28,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | வருவாய் | 184,20,50,000 | ... | 184,20,50,000 |
| | | மூலதனம் | 19,95,38,000 | ... | 19,95,38,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | வருவாய் | 27,02,000 | ... | 27,02,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | வருவாய் | 14,00,000 | ... | 14,00,000 |
| | | மூலதனம் | 4,59,27,000 | ... | 4,59,27,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 38 | பொதுத் துறை | வருவாய் | 2,38,35,000 | ... | 2,38,35,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 39 | கட்டடங்கள் (பொதுப்பணித் துறை) | வருவாய் | 51,55,000 | ... | 51,55,000 |
| | | மூலதனம் | 1,31,50,000 | ... | 1,31,50,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 40 | பாசனம் (பொதுப்பணித் துறை) | வருவாய் | 95,92,000 | ... | 95,92,000 |
| | | மூலதனம் | 111,51,85,000 | *1,000* | 111,51,86,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 41 | வருவாய்த் துறை | வருவாய் | 6,36,97,000 | ... | 6,36,97,000 |
| | | மூலதனம் | 21,25,00,000 | ... | 21,25,00,000 |
| | | கடன் | .. | .. | .. |

| கோரிக்கை எண். | பணிகளும் நோக்கங்களும். | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது. | மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது. | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | | *(3)* | *(4)* | *(5)* |
| | | | *ரூ.* | *ரூ.* | *ரூ.* |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | வருவாய் | 280,82,85,000 | ... | 280,82,85,000 |
| | | மூலதனம் | 237,13,00,000 | ... | 237,13,00,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | வருவாய் | 82,83,22,000 | ... | 82,83,22,000 |
| | | மூலதனம் | 164,00,00,000 | ... | 164,00,00,000 |
| | | கடன் | .. | .. | .. |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | வருவாய் | 10,00,00,000 | ... | 10,00,00,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | வருவாய் | 16,31,35,000 | ... | 16,31,35,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 32,05,000 | ... | 32,05,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 48 | போக்குவரத்துத் துறை | வருவாய் | 2,78,00,000 | ... | 2,78,00,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | வருவாய் | 3,83,75,000 | ... | 3,83,75,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| | ***கடன் செலவுகள்*** | வருவாய் | ... | *25,39,38,000* | 25,39,38,000 |
| | | மூலதனம் | .. | .. | .. |
| | | கடன் | .. | .. | .. |
| | | **வருவாய்** | **1,787,98,95,000** | ***25,39,38,000*** | **1,813,38,33,000** |
| | **மொத்தம்** | **மூலதனம்** | **1,184,21,23,000** | ***1,000*** | **1,184,21,24,000** |
| | | **கடன்** | **57,77,68,000** | **...** | **57,77,68,000** |
| | **பெருமொத்தம்** | **..** | **3,02,9,97,86,000** | ***25,39,39,000*** | **3,055,37,25,000** |

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2008—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29—ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது :—**

## சட்ட எண் 54/2008.

***1888-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் வகைமுறைகளை சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்கு நீட்டிப்பதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2008—ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிப்பு) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும், தொடக்கமும்.

(2) இது, 2008—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,— பொருள் வரையறைகள்.

(1) ''சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதி'' என்றால் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட காவல் நிலையங்களின் எல்லைகளைக் கொண்டிருக்கிற உள்ளாட்சிப் பரப்பிடம் எனப் பொருள்படும்.

தமிழ்நாடு சட்டம் III/1888. (2) ''மாநகரக் காவல் சட்டம்'' என்றால் 1888—ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டம் எனப் பொருள்படும்.

(3) ''அரசு'' என்றால் மாநில அரசு எனப் பொருள்படும்.

(4) ''நடைமுறையிலுள்ள சட்டம்'' என்பது தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமோ அல்லது அதன் பகுதி எதிலுமோ நடைமுறையில் இருக்கிற செய் சட்டத்தை, அவசரச் சட்டத்தை, ஒழுங்குமுறை விதியை, ஆணையை துணை விதியை, விதியை, திட்டத்தை அல்லது அறிவிக்கையையோ அல்லது தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமோ அதன் பகுதி எதிலுமோ சட்டத்தின் ஆற்றல் பெற்றிருக்கிற முறையாவணம் எதனையுமோ உள்ளடக்கும்.

3. (1) 2008—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18—ஆம் நாளுக்கு உடனடி முன்னதாக நடைமுறையில் இருந்தவாறான மாநகரக் காவல் சட்டமானது 2008—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18—ஆம் நாளன்றும் அது முதற்கொண்டும் செயல் விளைவு கொள்ளும் வகையில் சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்கும் செயற்பாடு நீட்டிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருதல் வேண்டும். III/1888 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தை நீட்டித்தல்.

(2) சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்கு நீட்டிக்கபட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தில்,—

(a) 3—ஆம் பிரிவில் குறிப்பிடப்படுகின்றவையல்லாத பிறவாறான சென்னை மாநகரத்திற்கான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்கான ஒரு சுட்டுகையாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(b) மாநகரக் குற்றவியல் நடுவர் என்று குறிப்பிடப்படுகின்ற சுட்டுகை எதுவும் இந்தச் சட்டத்தின் காரணமாக நீதித் துறை குற்றவியல் நடுவர் என்று குறிப்பிடப்படும் ஒரு சுட்டுகையாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(c) ஆணையர் எனக் குறிப்பிடப்படும் சுட்டுகை எதுவும் இந்தச் சட்டத்தின் காரணமாக சென்னை மாநகப் புறநகர்ப் பகுதியின் காவல் நிருவாகம் உற்றடைந்துள்ள சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதியின் காவல் துறை ஆணையர் என்று குறிப்பிடப்படும் சுட்டுகையாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

மாவட்ட குற்றவியல் நடுவர்கள் மற்றும் நிர்வாகத் துறை குற்றவியல் நடுவர்கள் ஆகியோர்களின் 1973–ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறை தொகுப்புச் சட்டத்தின் படியான அதிகாரத்தைச் செலுத்தி வருவதற்கு சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதியின் ஆணையருக்கும் சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதியின் ஒரு சில பிற காவல் அலுவலர்களுக்கும் அதிகாரம் அளிப்பதற்கு அரசுக்கு உள்ள அதிகாரம்.

**4. (1)** மாநகரக் காவல் சட்டத்தின் 7–ஆம் பிரிவில் அடங்கியுள்ள வகைமுறைகளுக்குப் பாதகமின்றி அரசானது, அறிவிக்கை வாயிலாகவும் மற்றும் அதில் குறித்துரைக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்கும் வரம்புக்கும் உட்பட்டும்,–

(a) அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறு, (இதன் பின்பு இந்தப் பிரிவில் மேற்சொன்ன தொகுப்புச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1973–ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் அத்தகைய வகைமுறைகளின்படியான அல்லது எந்தப் பொருட்பாடுகளைப் பொறுத்து மாநிலச் சட்டமன்றம் மாநிலத்திற்காக சட்டமியற்ற அதிகாரம் பெற்றிருக்கின்றதோ அந்தப் பொருட்பாடுகள் தொடர்பாக நடைமுறையில் உள்ள வேறு சட்டம் எதனின் வகைமுறைகளின்படியான நிருவாகத்துறை குற்றவியல் நடுவர் ஒருவரின் மற்றும் மாவட்ட குற்றவியல் நடுவர் ஒருவரின் அதிகாரங்களையும் கடமைகளையும், சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதி தொடர்பாகச் செலுத்திவரவும், புரிந்துவரவும் சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதி ஆணையருக்கு அதிகாரமளிக்கலாம்.

மையச் சட்டம் 2/1974.

(b) அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறு மேற்சொன்ன தொகுப்புச் சட்டத்தின் அத்தகைய வகைமுறைகளின்படியோ அல்லது எந்தப் பொருட்பாடு குறித்து மாநிலச் சட்டமன்றம் மாநிலத்திற்காக சட்டமியற்ற அதிகாரம் பெற்றிருக்கின்றதோ அந்த பொருட்பாடு தொடர்பாக நடைமுறையில் உள்ள வேறு சட்டம் எதனின் வகைமுறைகளின்படியோ நிருவாகத்துறை குற்றவியல் நடுவர் ஒருவரின் அதிகாரங்களையும் கடமைகளையும் அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறு சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதி தொடர்பாக அதிகாரங்களைச் செலுத்திவரவும், கடமைகளைப் புரிந்துவரவும் (காவல்துறை உதவி ஆணையரின் படிநிலைக்குக் கீழுள்ள ஓர் அலுவலராக இல்லாத) சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதியில் உள்ள காவல்துறை ஆணையருக்குக் கீழ் உள்ள அலுவலர் எவருக்கும் அதிகாரம் அளிக்கலாம்.

(2) சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதியில் உள்ள காவல்துறை ஆணையருக்குக் கீழுள்ள அலுவலர் ஒவ்வொருவரும், (1)–ஆம் உட்பிரிவின்படி எந்த அதிகாரங்களை அவர் செலுத்திவரவோ அல்லது கடமைகளை அவர் புரிந்து வரவோ அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளாரோ அந்த அதிகாரங்களில் எவற்றையும் செலுத்தி வருகையில் மற்றும் கடமைகளில் எதனையும் புரிந்து வருகையில், மேற்சொன்ன தொகுப்புச் சட்டத்தின் 20–ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்டுள்ள நிருவாகத்துறை குற்றவியல் நடுவரொருவர், அந்தப் பிரிவின்படி நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட குற்றவியல் நடுவரின் பொதுவான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவராக இருப்பதைப்போன்ற முறையிலும் அதே அளவுக்கும், மேற்சொன்ன காவல்துறை ஆணையரின் பொதுவான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(3) சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதியின் காவல்துறை ஆணையர் அல்லது அத்தகைய ஆணையருக்குக் கீழுள்ள அலுவலர் எவரும், (1)–ஆம் உட்பிரிவின்படி எந்த அதிகாரங்களை மற்றும் கடமைகளை அவர் செலுத்தி வரவோ அல்லது புரிந்து வரவோ அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரோ அந்த அதிகாரங்கள் மற்றும் கடமைகளில் எவற்றையும் செலுத்தி வருவதிலும், புரிந்து வருவதிலும், மேற்சொன்ன தொகுப்புச் சட்டத்தின் 20–ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட குற்றவியல் நடுவரின் பொதுவான கட்டுப்பாட்டிற்கு அவர் உட்பட்டவரல்லர்.

சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதியில் 2008–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18–ஆம் நாளுக்கு அடுத்து முந்தி செயல்பட்டு வந்த காவற் படையானது, நீட்டிக்கப்பட்ட படியான மாநகரக் காவல் சட்டத்தின் படி அமைக்கப் பட்டுள்ள காவற்படையாகவே கொள்ளப்படுதல் வேண்டும் எனல்.

**5. (1)** சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதியில் (இதன்பின்பு இந்தப் பிரிவில், இருந்துவந்த காவற்படை எனக் குறிப்பிடப்படுவதான) 2008–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18–ஆம் நாளுக்கு அடுத்து முந்தி செயல்பட்டு வந்த காவற்படையானது, செயற்பாடு நீட்டிக்கப்பட்டபடியான மாநகர்க் காவல் சட்டத்தின்படி 2008–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18–ஆம் நாளன்று இந்தச் சட்டத்தின் மூலம் சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்கென அமைக்கப்பட்டுள்ள காவற்படையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும், 2008–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18–ஆம் நாளுக்கு அடுத்து முந்தி இருந்துவந்த காவற் படையில் பதவி வகித்து வந்த உறுப்பினர் ஒவ்வொருவரும், 2008–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18–ஆம் நாளன்று சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்கான காவற்படையின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) 2008–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18–ஆம் நாளுக்கு அடுத்து முந்தி இருந்து வந்த காவற்படையின் காவல் அலுவலர் எவரின் முன்பாகவும் முடிவுறாது நிலுவையிலிருந்த (புலனாய்வுகள் வாயிலான நடவடிக்கைகள் உள்ளடங்கலான) நடவடிக்கைகள் அனைத்தும்,

2008–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18–ஆம் நாளன்று (1)–ஆம் உட்பிரிவின்படி எந்தப் பதவிக்கு அவர் நியமனம் செய்யப்படுவதாகக் கொள்ளப்படுகின்றாரோ அந்தப் பதவியை வகிப்பவர் என்கின்ற தகுதியில் அவர் முன்பு நடப்பிலுள்ள நடவடிக்கைகளாகக் கொள்ளப்பட்டு அவ்வாறே அவை மேற்கொண்டு நடத்தப்படுதலும் வேண்டும்.

(3) 2008–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18–ஆம் நாளுக்கு அடுத்து முந்தி மாவட்டக் குற்றவியல் நடுவரொருவரால் அல்லது நிருவாகத் துறை குற்றவியல் நடுவரொருவரால் சட்டம் எதன்படியும் செலுத்தப்படக்கூடியதான அதிகாரம் அல்லது ஆற்றப்படக்கூடியதான பணி எதுவும், நீட்டிக்கப்பட்டபடியான மாநகரக் காவல் சட்டத்தினாலோ அல்லது அதன்படியாகவோ காவல் துறை ஆணையருக்கோ அல்லது காவல் துறையில் உள்ள பிற அலுவலர் எவருக்குமோ வழங்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய வழங்குகைக்கு அடுத்து முந்தி மாவட்ட குற்றவியல் நடுவர் அல்லது நேர்விற்கேற்ப நிருவாகத்துறை குற்றவியல் நடுவரின் முன்னர் நடப்பிலிருந்து, அத்தகைய அதிகாரத்தைச் செலுத்துவது அல்லது அத்தகைய பணியை ஆற்றுவது தொடர்பான அல்லது அதிலிருந்து எழுகின்ற நடவடிக்கைகள் அனைத்தும், காவல்துறை ஆணையருக்கு அல்லது காவல் துறையின் பிற அலுவலருக்கு அத்தகைய அதிகாரம் அல்லது பணியானது வழங்கப்பட்டதன் காரணமாக சென்னை மாநகரப் புறநகருக்கான காவல் துறை ஆணையருக்கு அல்லது நேர்விற்கேற்ப காவல் துறையின் பிற அலுவலருக்கு மாற்றப்பட்டதாயிருத்தல் வேண்டும்; மற்றும் எந்த அலுவலருக்கு அவ்வாறு அத்தகைய நடவடிக்கைகள் மாற்றப்பட்டுள்ளனவோ அந்த அலுவலர் அவற்றைப் புதிதாகவோ அல்லது மாற்றம் செய்யப்பட்டுள்ள அத்தகைய நிலையிலிருந்தோ மேற்கொள்ளுதல் வேண்டும்.

சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதி ஆணையரின் மீது காவல் துறை தலைமை இயக்குநரின் கட்டுப்பாடு.

6. (1) சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதி காவல் துறை ஆணையர், அப்பகுதிக்குச் செயற்பாடு நீட்டிக்கப்பட்டபடியான மாநகரக் காவற்படைச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், அவ்வாறு நீட்டிக்கப் பட்டவாறான சென்னைக் காவல் சட்டத்தின்கீழ் தமது பணியைச் செய்து வருகையில் (2)–ஆம் உட்பிரிவின்படி செய்யப்படக்கூடிய விதிகள் எவற்றுக்கும் உட்பட்டு, தமிழ்நாடு மாநிலத்திற்கான காவல் துறை தலைமை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழும் செயலாட்சியின் கீழும் இருந்து வருவார்.

(2) சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதி காவல் துறை ஆணையரைப் பொறுத்து, (1)–ஆம் உட்பிரிவினால் காவல் துறை தலைமை இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு மற்றும் செயலாட்சி அதிகாரங்களைச் செலுத்தி வருவதை வரையறுப்பதற்கும் முறைப்படுத்துவதற்குமான விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு உரிமையுண்டு.

(3) மாவட்டக் குற்றவியல் நடுவரொருவராகவோ அல்லது நிருவாகத் துறை குற்றவியல் நடுவரொருவராகவோ சட்டம் எதன்படியும், சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதி காவல்துறை ஆணையரால் செலுத்தப்படக்கூடிய அதிகாரங்கள் அல்லது ஆற்றப்படக்கூடிய பணிகள் தொடர்பாக இந்தப் பிரிவிலுள்ள எதுவும் பொருந்துதலாகாது.

சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதியில் நடைமுறையில் இல்லாத சட்டங்களைக் குறிப்பிடும் சுட்டுகைகளுக்குப் பொருள் கொள்ளுதல்.

7. 2008–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18–ஆம் நாளன்று சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதியில் நடைமுறையில் இல்லாத சட்டமொன்று குறித்து இந்தச் சட்டத்தினால் செயற்பாடு நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தில் உள்ள சுட்டுகை எதுவும், மேற்சொன்ன பகுதி தொடர்பாக மேற்சொன்ன பகுதியில் நடைமுறையில், நேரிணையான வேறு சட்டம் ஏதேனுமிருப்பின், அதைக் குறிக்கும் ஒரு சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

புதிய அதிகார அமைப்புகள் அமைத்துருவாக்கப்பட்டிருக்–கின்ற விடத்து, அதிகார அமைப்புகளைக் குறிப்பிடும் சுட்டுகைக்குப் பொருள் கொள்ளுதல்.

8. சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதியில் அதிகாரங்கள் எவற்றையும் செலுத்தி வருவதற்கு அல்லது பணிகள் எவற்றையும் ஆற்றிவருவதற்கு, 2008–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18–ஆம் நாளுக்கு அடுத்து முந்திய தேதியன்று, தகுதியுடையதாயிருந்த அதிகார அமைப்பு என்று நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் எந்த அமைப்பு மூலமாகவுமோ சொற்களின் மூலமாகவுமோ குறிப்பிடப்படும் சுட்டுகை எதுவும், அப்பகுதிக்கு நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தின் மூலமாகவோ அல்லது அதன்படியாகவோ அல்லது இந்தச் சட்டத்தின்படியாகவோ மேற்சொன்ன பகுதிக்கு நேரிணையான புதிய அதிகார அமைப்பொன்று அமைத்துருவாக்கப் பட்டிருக்கின்றவிடத்து, அது அந்தப் புதிய அதிகார அமைப்பைக் குறிப்பிடும் ஒரு சுட்டுகையாக இருந்தாற்போன்று செயல்விளைவு கொள்ளுதல் வேண்டும்.

மாநகர் காவல் சட்டத்தைப் பொருந்தச் செய்வதற்கு உதவுகின்ற நோக்கங் களுக்காக நீதிமன்றங்கள் பிற அதிகார அமைப்புகள் ஆகியவற்றிற் குள்ள அதிகாரங்கள்.

9. சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதியில் அப்பகுதிக்குச் செயற்பாடு நீட்டிக்கப்பட்டபடியான மாநகரக் காவல் சட்டத்தைப் பொருந்தச் செய்வதற்கு உதவுகின்ற நோக்கங்களுக்காக, நீதிமன்றம் எதுவும் அல்லது பிற அதிகார அமைப்பு எதுவும் அந்த நீதிமன்றத்தின் அல்லது அந்த அதிகார அமைப்பின் முன்பு உள்ள பொருட்பாடு எதற்கும் ஏற்றபடி அதன் சாராம்சத்தைப் பாதிக்காமல் மேற்சொன்ன சட்டத்தைத் தழுவிப் பொருந்தச் செய்வதற்குத் தேவையானதாகவோ முறையானதாகவோ இருக்கக்கூடிய மாறுதல்களுடன் அதற்குப் பொருள் கொள்ளலாம்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

10. (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றின் எதையும் நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படிச் செய்யப்படும் விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும், மேலும், குறிப்பிட்டதொரு நாளன்று அவை நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், குறிப்பிட்டதொரு நாளன்று அவை நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்படும் நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், சட்ட மன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும், மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத் தொடரோ அல்லது அதனை அடுத்துவரும் கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்னர் சட்ட மன்றப் பேரவை அந்த விதியில் அறிவிக்கையில் அல்லது ஆணையில் மாறுதல் எதையும் செய்வதற்கு உடன்படுமானால் அல்லது அந்த விதி செய்யப்படுதலோ அல்லது அறிவிக்கை அல்லது ஆணை பிறப்பிக்கப்படுதலோ ஆகாது என்று உடன்படுமானால் அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை அத்தகைய மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும். அல்லது நேர்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அவ்வாறு மாறுதல் செய்வது அல்லது நடைமுறைக்கு வராமற்போனது எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின்கீழ் முன்னதாகச் செய்யப்பட்டுள்ள செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் பாதகமின்றி இருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

11. இந்தச் சட்டத்தின்படி சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்குச் செயற்பாடு நீட்டிக்கப்பட்டபடியான மாநகரக் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசு, தறுவாய் கோருகிறவாறு, ஆணையின் மூலம் அந்த இடர்பாட்டை நீக்குகின்ற நோக்கத்திற்காக தேவையானதென அதற்குத் தோன்றக் கூடிய எதனையும் செய்யலாம்:

**வரம்புரை.**—ஆனால், 2008—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18—ஆம் நாளிலிருந்து இரண்டாண்டுகள் முடிவடைந்த பின்னர், இந்தப் பிரிவின்படியான ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

சென்னை மாநகரத்திலிருந்து பகுதியானது நீக்கப்படுதல்

12. 2008—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18—ஆம் நாளன்று இந்த இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட காவல் நிலையங்களின் எல்லைகளைக் கொண்டிருக்கிற உள்ளாட்சிப் பரப்பிடமானது, மாநகரக் காவல் சட்டத்தின் 3—ஆம் பிரிவின் நோக்கத்திற்காக சென்னை மாநகரத்திலிருந்து நீக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்

நீக்கமும் காப்பும்.

13. (1) 2008—ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (சென்னை மாநகரப் புறநகர்ப் பகுதிக்கு செயற்பாடு நீட்டிப்பு) அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/2008.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**இணைப்பு பட்டியல்**

*[ 2 (1) எனும் பிரிவைக் காணவும்]*

**காவல் நிலையங்கள்**

1. பரங்கிமலை காவல் நிலையம்
2. மீனம்பாக்கம் காவல் நிலையம்
3. பல்லாவரம் காவல் நிலையம்
4. குரோம்பேட்டை காவல் நிலையம்
5. சங்கர் நகர் காவல் நிலையம்
6. தாம்பரம் காவல் நிலையம்
7. மடிப்பாக்கம் காவல் நிலையம்
8. பழவந்தாங்கல் காவல் நிலையம்
9. ஆதம்பாக்கம் காவல் நிலையம்
10. பள்ளிக்கரணை காவல் நிலையம்
11. சிட்லப்பாக்கம் காவல் நிலையம்
12. பீர்க்கன்கரணை காவல் நிலையம்
13. சேலையூர் காவல் நிலையம்
14. விமான நிலைய காவல் நிலையம்
15. நந்தம்பாக்கம் காவல் நிலையம்
16. பூந்தமல்லி காவல் நிலையம்
17. ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை காவல் நிலையம்
18. குன்றத்தூர் காவல் நிலையம்
19. மாங்காடு காவல் நிலையம்
20. அம்பத்தூர் காவல் நிலையம்
21. அம்பத்தூர் தொழிற்பேட்டை காவல் நிலையம்
22. கொரட்டூர் காவல் நிலையம்
23. மதுரவாயல் காவல் நிலையம்
24. ஆவடி காவல் நிலையம்
25. ஆவடி டாங்க் பேக்டரி காவல் நிலையம்
26. பட்டாபிராம் காவல் நிலையம்
27. முத்துபுதுப்பேட்டை காவல் நிலையம்
28. திருநின்றவூர் காவல் நிலையம்
29. நசரத்பேட்டை காவல் நிலையம்
30. திருமுல்லைவாயில் காவல் நிலையம்

31. திருவேற்காடு காவல் நிலையம்

32. மாதவரம் காவல் நிலையம்

33. மாதவரம் பால் பண்ணை காவல் நிலையம்

34. செங்குன்றம் காவல் நிலையம்

35. எண்ணூர் காவல் நிலையம்

36. மணலி காவல் நிலையம்

37. மணலி புதுநகர் காவல் நிலையம்

38. சாத்தங்காடு காவல் நிலையம்

39. புழல் காவல் நிலையம்

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்ட எண் 55/2008.**

***தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**பகுதி – I**

**முன்னுரையாக.**

**1.** (1) இந்தச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும், தொடக்கமும்.

(2) இது, 2008-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26-ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**பகுதி –II**

**1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் IV/1919.

**2.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1919–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 78–ஆம் பிரிவிற்கும், 79–ஆம் பிரிவிற்கும் பதிலாக, பின்வரும் பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 78–ஆம் பிரிவிற்கும், 79–ஆம் பிரிவிற்கும் பதிலாக அமைத்தல்.

***"78. மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு நகராட்சிய அமைப்புகளின் அதிகாரங்கள்.***–மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு வெவ்வேறு நகராட்சிய அமைப்புகளின் அதிகாரங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

(*a*) மதிப்பீட்டின் தொகையானது பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாதபோது, தொடர்பான சிற்றொகுதிகள் குழுவின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*b*) மதிப்பீட்டின் தொகையானது பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத போது, ஆணையரின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*c*) மதிப்பீட்டின் தொகையானது ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் அறுபது இலட்ச ரூபாய்க்கு மேற்படாதபோது, மேயரின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*d*) மதிப்பீட்டின் தொகையானது அறுபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் எழுபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத போது, (வரிவிதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக்குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக் குழுவின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*e*)மதிப்பீட்டின் தொகையானது எழுபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாத போது, வரிவிதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*f*) மதிப்பீட்டின் தொகையானது ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் பத்து கோடி ரூபாய்க்கு மேற்படாதபோது, மன்றத்தின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*g*) மதிப்பீட்டின் தொகையானது பத்து கோடி ரூபாய்க்கு மேற்படுகிறபோது, மாநில அரசின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

***79. அறுபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்பீட்டிலான பணிகள்.***– (1) மொத்த மதிப்பீட்டுச் செலவானது, அறுபது இலட்ச ரூபாய்க்கு மேற்படுகிற நிலையிலான பணி எதையுமோ அல்லது தொடர் பணி எவற்றையுமோ நிறைவேற்றுவதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளவிடத்து,–

(*a*) ஆணையர், தேவைப்படக்கூடிய அத்தகைய மதிப்பீடுகள் மற்றும் வரைபடங்கள் உள்ளடங்கலான விரிவான அறிக்கை ஒன்றினைத் தயாரிப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும் மற்றும் அதனை,–

(i) மொத்த மதிப்பீட்டுச் செலவானது அறுபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் எழுபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாமல் இருக்குமானால், (வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக் குழுவின் முன்பு வைத்தல் வேண்டும்;

(ii) மொத்த மதிப்பீட்டுச் செலவானது எழுபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாமல் இருக்குமானால், வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவின் முன்பு வைத்தல் வேண்டும்;

(iii) மொத்த மதிப்பீட்டுச் செலவானது ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுமானால் மன்றத்தின் முன்பு வைத்தல் வேண்டும்;

(*b*) தொடர்பான நிலைக் குழுவோ அல்லது வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவோ அல்லது நேர்விற்கேற்ப மன்றமோ அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்தல் வேண்டும்; மற்றும் அதனை மொத்தமாகவோ அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டோ ஏற்பளிக்கலாம் அல்லது அதற்கு ஏற்பளிக்க மறுத்துத் தள்ளி விடலாம்.

(2). (*a*) மொத்த மதிப்பீட்டுச் செலவானது பத்து கோடி ரூபாய்க்கு மேற்படுகிற திட்டத்திற்கு, மாறுதல்களுக்கு உட்பட்டோ அல்லது பிறவாறோ மன்றம் ஏற்பளிக்கிறவிடத்து அதனை மாநில அரசுக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(*b*) மாநில அரசானது, இத்திட்டத்திற்கு மொத்தமாகவோ அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டோ ஏற்பளிக்கலாம் அல்லது அதற்கு ஏற்பளிக்க மறுத்துத் தள்ளி விடலாம்; மற்றும் மாநில அரசின் அத்தகைய ஒப்பளிப்பு இல்லாமல் பணியானது தொடங்கப்படுதல் கூடாது.

(*c*) மேற்சொன்னவாறு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டத்தில், மாநில அரசின் ஒப்புதல் இல்லாமல் முக்கியமான மாற்றம் எதையும் செயல் விளைவுக்குக் கொண்டு வருதல் கூடாது.''.

80–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** 1919–ஆம் ஆண்டு சட்டத்தின் 80–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவிற்கு பதிலாக, பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(2) மாநகராட்சியின் சார்பாக செய்யப்படும் ஒப்பந்தம் ஒவ்வொன்றும் பின்வரும் வகைமுறைகளுக்கு உட்பட்டு ஆணையரால் செய்யப்படுதல் வேண்டும், அதாவது:–

(*a*) தொடர்பான சிற்றொகுதிகள் குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*b*) பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் ஆணையரால் செய்யப்படுதல் வேண்டும்;

(*c*) ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் அறுபது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், மேயரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*d*) அறுபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் எழுபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் (வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக்குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*e*) எழுபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*f*) ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் பத்து கோடி ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், மன்றத்தினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*g*) பத்து கோடி ரூபாய்க்கு மேற்பட்டு மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் மாநில அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*h*) நாற்பதாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற, ஆணையரால் செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாள்களுக்குள்ளாக தொடர்பான நிலைக் குழுவிற்கு அறிக்கை செய்யப்படுதல் வேண்டும்.''.

பகுதி–III

1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 15/1971.

97–ஆம் பிரிவிற்கும், 98–ஆம் பிரிவிற்கும் பதிலாக அமைத்தல்.

**4.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1971–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் 97–ஆம் பிரிவிற்கும் 98–ஆம் பிரிவிற்கும் பதிலாக, பின்வரும் பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

**"97. மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு நகராட்சிய அமைப்புகளின் அதிகாரங்கள்.–** மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு வெவ்வேறு நகராட்சிய அமைப்புகளின் அதிகாரங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—

(*a*) மதிப்பீட்டின் தொகையானது ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாதபோது, தொடர்பான சிற்றொகுதிகள் குழுவின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*b*) மதிப்பீட்டின் தொகையானது ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத போது, ஆணையரின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*c*) மதிப்பீட்டின் தொகையானது பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்படாதபோது, மேயரின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*d*) மதிப்பீட்டின் தொகையானது இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத போது, (வரிவிதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக்குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக் குழுவின் ஒப்புதல் கோரப்படுதல் வேண்டும்;

(*e*) மதிப்பீட்டின் தொகையானது முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத போது, வரிவிதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*f*) மதிப்பீட்டின் தொகையானது ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாதபோது, மன்றத்தின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*g*) மதிப்பீட்டின் தொகையானது ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகிறபோது அரசின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

***98. இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்பீட்டிலான பணிகள்.–*** (1) மொத்த மதிப்பீட்டுச் செலவானது இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்படுகிற நிலையிலான பணி எதையுமோ அல்லது தொடர் பணி எவற்றையுமோ நிறைவேற்றுவதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளவிடத்து,–

(*a*) ஆணையர், தேவைப்படக்கூடிய அத்தகைய மதிப்பீடுகள் மற்றும் வரைபடங்கள் உள்ளடங்கலான விரிவான அறிக்கை ஒன்றினைத் தயாரிப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும் மற்றும் அதனை,–

(i) மொத்த மதிப்பீட்டுச் செலவானது இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாமல் இருக்குமானால், (வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக் குழுவின் முன்பு வைத்தல் வேண்டும்;

(ii) மொத்த மதிப்பீட்டுச் செலவானது முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாமல் இருக்குமானால், வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவின் முன்பு வைத்தல் வேண்டும்;

(iii) மொத்த மதிப்பீட்டுச் செலவானது ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படுமானால் மன்றத்தின் முன்பு வைத்தல் வேண்டும்;

(*b*) தொடர்பான நிலைக் குழுவோ அல்லது வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவோ அல்லது நேர்விற்கேற்ப மன்றமோ அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்தல் வேண்டும்; மற்றும் அதனை மொத்தமாகவோ அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டோ ஏற்பளிக்கலாம் அல்லது அதற்கு ஏற்பளிக்க மறுத்துத் தள்ளி விடலாம்.

(2). (*a*) மொத்த மதிப்பீட்டுச் செலவானது ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகிற திட்டத்திற்கு மாறுதல்களுக்கு உட்பட்டோ அல்லது பிறவாறோ மன்றம் ஏற்பளிக்கிறவிடத்து அதனை அரசுக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(*b*) அரசானது, இத்திட்டத்திற்கு மொத்தமாகவோ அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டோ ஏற்பளிக்கலாம் அல்லது அதற்கு ஏற்பளிக்க மறுத்துத் தள்ளி விடலாம்; மற்றும் அரசின் அத்தகைய ஒப்பளிப்பு இல்லாமல் பணியானது தொடங்கப்படுதல் கூடாது.

(*c*) மேற்சொன்னவாறு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டத்தில், அரசின் ஒப்புதல் இல்லாமல் முக்கியமான மாற்றம் எதையும் செயல் விளைவுக்குக் கொண்டு வருதல் கூடாது.''.

99–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** 1971–ஆம் ஆண்டு சட்டத்தின் 99–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(2) மாநகராட்சியின் சார்பாக செய்யப்படும் ஒப்பந்தம் ஒவ்வொன்றும் பின்வரும் வகைமுறைகளுக்கு உட்பட்டு ஆணையரால் செய்யப்படுதல் வேண்டும், அதாவது:—

(*a*) தொடர்பான சிற்றொகுதிகள் குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு இருந்தாலன்றி ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*b*) ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் ஆணையரால் செய்யப்படுதல் வேண்டும்;

(*c*) பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் மேயரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*d*) இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் (வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக்குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*e*) முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*f*) ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், மன்றத்தினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*g*) ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்டு மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*h*) பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற, ஆணையரால் செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாள்களுக்குள்ளாக தொடர்பான நிலைக் குழுவிற்கு அறிக்கை செய்யப்படுதல் வேண்டும்.".

## பகுதி–IV

## 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

99–ஆம் பிரிவிற்கும், 100–ஆம் பிரிவிற்கும் பதிலாக அமைத்தல்.

**6.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1981–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 99–ஆம் பிரிவிற்கும்; 100–ஆம் பிரிவிற்கும் பதிலாக, பின்வரும் பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:— தமிழ்நாடு சட்டம் 25 / 1981.

***"99. மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு நகராட்சிய அமைப்புகளின் அதிகாரங்கள்.–*** மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு வெவ்வேறு நகராட்சிய அமைப்புகளின் அதிகாரங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—

(*a*) மதிப்பீட்டின் தொகையானது ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாதபோது, தொடர்பான சிற்றொகுதிகள் குழுவின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*b*) மதிப்பீட்டின் தொகையானது ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத போது, ஆணையரின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*c*) மதிப்பீட்டின் தொகையானது பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்படாதபோது, மேயரின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*d*) மதிப்பீட்டின் தொகையானது இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத போது, (வரிவிதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக்குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக் குழுவின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*e*) மதிப்பீட்டின் தொகையானது முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத போது, வரிவிதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*f*) மதிப்பீட்டின் தொகையானது ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாதபோது, மன்றத்தின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்;

(*g*) மதிப்பீட்டின் தொகையானது ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகிறபோது அரசின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

***100. இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்பீட்டிலான பணிகள்.***–(1) மொத்த மதிப்பீட்டுச் செலவானது இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்படுகிற நிலையிலான பணி எதையுமோ அல்லது தொடர்பணி எவற்றையுமோ நிறைவேற்றுவதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளவிடத்து,–

(*a*) ஆணையர், தேவைப்படக்கூடிய அத்தகைய மதிப்பீடுகள் மற்றும் வரைபடங்கள் உள்ளடங்கலான விரிவான அறிக்கை ஒன்றினைத் தயாரிப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும் மற்றும் அதனை,–

(i) மொத்த மதிப்பீட்டுச் செலவானது இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாமல் இருக்குமானால், (வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக் குழுவின் முன்பு வைத்தல் வேண்டும்;

(ii) மொத்த மதிப்பீட்டுச் செலவானது முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாமல் இருக்குமானால், வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவின் முன்பு வைத்தல் வேண்டும்;

(iii) மொத்த மதிப்பீட்டுச் செலவானது ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படுமானால் மன்றத்தின் முன்பு வைத்தல் வேண்டும்;

(*b*) தொடர்பான நிலைக் குழுவோ அல்லது வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவோ அல்லது நேர்விற்கேற்ப மன்றமோ அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்தல் வேண்டும்; மற்றும் அதனை மொத்தமாகவோ அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டோ ஏற்பளிக்கலாம் அல்லது அதற்கு ஏற்பளிக்க மறுத்துத் தள்ளி விடலாம்.

(2). (*a*) மொத்த மதிப்பீட்டுச் செலவானது ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகிற திட்டத்திற்கு மாறுதல்களுக்கு உட்பட்டோ அல்லது பிறவாறோ மன்றம் ஏற்பளிக்கிறவிடத்து அதனை அரசுக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(*b*) அரசானது, இத்திட்டத்திற்கு மொத்தமாகவோ அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டோ ஏற்பளிக்கலாம் அல்லது அதற்கு ஏற்பளிக்க மறுத்துத் தள்ளி விடலாம்; மற்றும் அரசின் அத்தகைய ஒப்பளிப்பு இல்லாமல் பணியானது தொடங்கப்படுதல் கூடாது.

(*c*) மேற்சொன்னவாறு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டத்தில், அரசின் ஒப்புதல் இல்லாமல் முக்கியமான மாற்றம் எதையும் செயல் விளைவுக்குக் கொண்டு வருதல் கூடாது.".

**7.** 1981–ஆம் ஆண்டு சட்டத்தின் 101–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவிற்கு பதிலாக, பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:- 101–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(2) மாநகராட்சியின் சார்பாக செய்யப்படும் ஒப்பந்தம் ஒவ்வொன்றும் பின்வரும் வகைமுறைகளுக்கு உட்பட்டு ஆணையரால் செய்யப்படுதல் வேண்டும். அதாவது:—

(*a*) தொடர்பான சிற்றொகுதிகள் குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு இருந்தாலன்றி ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*b*) ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் ஆணையரால் செய்யப்படுதல் வேண்டும்;

(*c*) பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினை கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் மேயரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*d*) இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், (வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக்குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*e*) முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*f*) ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், மன்றத்தினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*g*) ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்டு மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது;

(*h*) பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற, ஆணையரால் செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாள்களுக்குள்ளாக தொடர்பான நிலைக் குழுவிற்கு அறிக்கை செய்யப்படுதல் வேண்டும்.".

நீக்கமும் காப்பும்.

**8.** (1) 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டமானது, இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/2008.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம், 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம், 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம் ஆகிய சட்டங்களின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான, 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம், 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம், 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம் ஆகிய சட்டங்களின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் IV/1919.
தமிழ்நாடு சட்டம் 15/1971.
தமிழ்நாடு சட்டம் 25/1981.

தமிழ்நாடு சட்டம் IV/1919.
.தமிழ்நாடு சட்டம் 15/1971.
தமிழ்நாடு சட்டம் 25/1981.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 56/2008.**

***சென்னைப் பெருநகரத் திட்டப் பரப்பிடத்திற்கு ஓராண்டுக் கால அளவிற்குத் தனி வகை முறைகளைச் செய்வதற்கும், அதனோடு தொடர்புடைய அல்லது அவற்றுக்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்குமானதொரு சட்டம்.***

தற்போது நடைமுறையில் உள்ள சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்கான முதல் பெரும் திட்டம், அதில் அடங்கியுள்ள மேம்பாட்டு கட்டுப்பாட்டு விதிகள் மற்றும் கட்டட விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் துணைமுறை விதிகள் ஆகியவற்றுக்கு இணங்கிய வகையில் அல்லாமல், அதிகாரமளிக்கப்படாத கட்டமைப்பு வளர்ச்சிகளுக்கு வழி கோலுகிற வகையில் சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்தில் உள்ள நிலங்கள் மற்றும் கட்டமைப்புகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிற வகையில், தொழில்மயமாக்கல், மக்கள் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் குடிபெயர்தல் மற்றும் பல்வேறு பிற காரணங்களால் மக்கள் தொகையில் அதிவேகமான வளர்ச்சி ஏற்பட்டுவிட்டதாலும்;

மேலும், மேம்பாட்டுக்கான அனைத்துக் கூறுகளையும் ஆய்ந்து பார்க்குமாறும், 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊரமைப்புச் சட்டத்திற்கு (தமிழ்நாடு சட்டம் 35/1972) தேவையான மாறுதல்களைச் செய்வதற்கு ஆலோசனை வழங்குமாறும் ஓய்வுபெற்ற உச்ச நீதி மன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் குழு ஒன்றை அரசானது அமைத்துருவாக்கியுள்ளதாலும்;

மேலும், மேற்சொன்ன குழுவின் பரிந்துரைகளானவை, 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊரமைப்புச் சட்டத்திற்குப் (தமிழ்நாடு சட்டம் 35/1972) பெருமளவிலான திருத்தங்களை உள்ளடக்கக் கூடும் என்பதோடு, அவற்றுள் சிலவற்றுக்கு, அதிலும் குறிப்பாக மேற்சொன்ன சட்டத்தின்படி தற்போதுள்ளவாறான முறையை மாற்றுகிற வகையில் வளாகங்களைக் கட்டுதல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பான வகைமுறைகளுக்கு, முன்தேதியிட்டு செயல்விளைவு கொடுக்க வேண்டியிருக்கும், என்பதாலும்;

மேலும், சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமமானது சென்னைப் பெருநகர–திட்டப் பரப்பிடத்திற்கு, 2026–ஆம் ஆண்டினைத் தொலைநோக்கு எல்லை ஆண்டாகக் கொண்டு நகர்ப்புற வளர்ச்சி எழுகிற புதிய பரிமாணங்களைக் கருத்தில்கொண்டு II–ஆம் பெரும் திட்டத்தின் வரைவு ஒன்றினைத் தயாரித்து 31–8–2007 வரையிலான கால அளவினைக் கொடுத்து, பொதுமக்களிடமிருந்து மறுப்புரைகள் அல்லது ஆலோசனைகளைப் பெறுவதற்காக அது வெளியிடப்பட்டுள்ளது. இரண்டாம் பெரும் திட்டத்தின் வரைவானது மக்களுடனான கலந்தாய்விற்குப் பின்னரும் அரசினால் ஆலோசனை வழங்கப்பட்டவாறான மாற்றங்களைச் செய்த பின்னரும், 2008–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29–ஆம் நாளன்று அரசுக்கு மறுபடியும் பணிந்தனுப்பப்பட்டது; அரசானது, 2026–ஆம் ஆண்டுக்கான சென்னை பெருநகர் திட்டப் பரப்பிடத்திற்கான II–ஆம் பெரும் திட்ட வரைவிற்கு ஏற்பளிப்பு வழங்கியுள்ளது; மற்றும் அது 2008–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2–ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

மேலும், சென்னைப் பெருநகரப்பரப்பிடத்தில் குடிசைப் பகுதிகளை மேம்பாடு செய்வதற்காகவும் தேவைப்படும்போதெல்லாம் குடிசைப் பகுதியில் உள்ள மக்களை மறு குடியமர்வு செய்வதற்கு விரிவானதொரு கொள்கையினை உருவாக்க மாநில அரசானது கருதியுள்ளதாலும்;

மேலும், II–ஆம் பெரும் திட்டத்தின் வரையறைகளின்படி பொதுத் தெருக்களில் விற்பனை செய்பவர்களின் செயற்பாட்டையும் மற்றும் கூவி விற்பவர்களின் செயற்பாட்டையும் ஒழுங்குபடுத்துவதற்கான செயல்திட்டம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் அவர்களால் செய்யப்படும் அதிகாரமற்ற கையுடைமை தொடர்பான பிரச்சனைகள் குறித்து விரிவானதொரு ஆய்வினைச் செய்யக் கருதப்பட்டுள்ளதாலும்;

மேலும், தற்போது நடைமுறையிலுள்ள சென்னைப் பெருநகர திட்டப்பரப்பிடத்திற்கான முதலாம் பெரும் திட்டத்தின் மற்றும் அதில் அடங்கியுள்ள மேம்பாட்டு கட்டுப்பாட்டு விதிகளின் வகைமுறைகளை மீறுவதற்கான நடவடிக்கையை, அரசினால் இந்தப் பொருட்பாடு குறித்து இறுதியான கருத்து எய்தப்படுவதற்கு முன்பாக, எடுப்பதானது சிறிய வணிகர்கள் உள்ளடங்கலான பெருமளவிலான மக்களுக்குத் தவிர்க்க இயலாத துன்பத்தையும் சரி செய்ய இயலாத இழப்பினையும் ஏற்படுத்தக் கூடும் என்பதாலும்;

மேலும், 2007–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டத்திற்குப் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2007) பதிலாக அமைக்கப்பட்ட 2007–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 39/2007) சென்னை

உயர்நீதிமன்றத்தின் முன்பு எதிர்க்கப்பட்டது; மற்றும் அது சென்னை உயர்நீதிமன்றத்தின் ஈராயம் ஒன்றினால் செல்லுபடியாகாதென நீக்கப்பட்டதாலும்;

மேலும், மேற்சொன்ன தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2007, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 39/2007 ஆகியவற்றைச் செல்லுபடியாகாதென நீக்கம் செய்த, சென்னை உயர் நீதிமன்றத்தின் மேற்சொன்ன தீர்ப்பிற்கு எதிராக, இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட தனி அனுமதி மனுக்களில் உச்ச நீதிமன்றமானது, மேலும் ஆணைகள் பிறப்பிக்கப்படுவது வரையிலும், 14–12–2007 அன்று இருந்தபடியான நிலையானது பேணி வரப்படுதல் வேண்டும் எனவும் மனுதாரர்கள் அதற்கு இடையில் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான ஆணை எதனையும் பிறப்பித்தல் கூடாது எனவும் ஆணையிட்டுள்ளதாலும்;

மேலும், மேற்சொன்ன 39/2007 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் செல்லும் தன்மை குறித்த வழக்கானது இந்திய உச்ச நீதிமன்றத்தின் நிலுவையில் இருந்து வருவதாலும்; மேற்சொன்ன 39/2007–எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டமானது 2008–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27–ஆம் நாள் முதற்கொண்டு செயல் விளைவுகொள்வது அற்றுப்போகும் என்பதாலும்;

மேலும், பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து இயக்கத்திற்கான தேவைப்பாடுகளை விட்டுக்கொடுக்காமல் அதே நேரத்தில், நீதிமன்றத் தீர்ப்புக்களின் உயிர்ப்புத் தன்மையையும் அவற்றின் வாசகங்களையும் கருத்திற்கொண்டும் சரிசமமான நிலையிலும் நேரிய நிலையிலும் அமைந்த சிறிய அல்லது பெரிய இயல்பினதான மீறுகைகளைப் பொறுத்த அளவில் வகைமுறைகளைச் செய்வது தேவையானதாக இருப்பதாலும் ;

மேலும், பாதுகாப்பு நடவடிக்கை ஒன்றை முழுவதுமாக உருவாக்க வணிக மற்றும் கடைகளைக் கொண்ட மையங்களில் முன்னெச்சரிக்கையாகத் தீயணைப்புப் பாதுகாப்பிற்கான நவீன தேவைப்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய, திட்டமிடும் அதிகார அமைப்பிற்குத் தக்கவாறு அதிகாரம் அளிப்பதற்கு வகைமுறைகளைச் செய்யவேண்டியிருப்பதாலும் ;

மேலும், ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் அமைந்த குழுவின் அறிக்கையைப் பரிசீலனை செய்வதற்கு அரசுக்கு மேலும் காலம் தேவைப்படும் என்பதாலும் மற்றும் அதிகாரமளிக்கப்படாத கட்டடங்களுக்கு எதிராகச் செயல்முறை நடவடிக்கை எடுப்பதைத் தள்ளிவைக்கவேண்டியது உடனடித் தேவையாகியிருப்பதாலும்;

மேலும், 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் தற்போது பயனுள்ள வகையில் இல்லாததாலும், 2009ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26ஆம் நாள் வரையிலான கால அளவிற்குள்ளாக மேலே குறிப்பிடப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் முடிவு செய்யவேண்டியிருப்பதாலும், அந்தக் கால அளவிற்கு அவ்வாறான நடவடிக்கைக்கு எதிராக சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திலுள்ள மக்களுக்குத் தற்காலிக நிவாரணம் வழங்குவதற்குச் சட்டம் ஒன்றை இயற்றுவது உகந்ததாயிருப்பதாலும்;

மேலும், சிறிய வணிகர்கள் உள்ளடங்கலான பெருமளவிலான மக்களுக்குத் தற்காலிக நிவாரணம் வழங்குவதற்கும் அவர்களுக்கு ஏற்படக்கூடிய தவிர்க்க இயலாத துன்பத்தையும் சரி செய்ய இயலாத இழப்பினையும் குறைப்பதற்கும் ஓர் ஆண்டுக் கால அளவு ஒன்றுக்குச் சட்டம் ஒன்றை இயற்றுவது உகந்ததாக இருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:

குறுந்தலைப்பு அளாவுகை தொடக்கம் மற்றும் கால அளவு.

**1.** (1) இந்தச் சட்டமானது, 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்தை அளாவி நிற்கும்.

(3) இது, 2008–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27–ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) இது, இதன் தொடக்கத் தேதியிலிருந்து ஓர் ஆண்டு முடிவடைவதன் பேரில் செயல்விளைவு கொள்வது அற்றுப்போதல் வேண்டும்; அவ்வாறு அற்றுப்போவதற்கு முன்பாக செய்யப்பட்ட அல்லது செய்யாமல் விடப்பட்ட செயற்பாடுகளைப் பொறுத்த வரையில் அல்லாமல் அற்றுப்போதல் வேண்டும். மற்றும் அவ்வாறு அற்றுப்போவதன் பேரில், இந்தச் சட்டமானது தமிழ்நாடு சட்டம் ஒன்றினால் நீக்கம் செய்யப்பட்டிருந்தாற்போன்றே, 1891–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுக் கூறுகள் சட்டத்தின் 8–ஆம் பிரிவானது பொருந்துதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 1/1891.

பொருள் வரையறைகள்.

**2.** (1) இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி.—

(*a*) ‘‘கட்டட விதிகள், ஒழுங்குமுறை விதிகள், துணைமுறை விதிகள்’’ என்றால் கட்டடங்கள் தொடர்பாக 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம், 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், நேர்விற்கேற்ப 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள்

தமிழ்நாடு சட்டம் IV/1919.

தமிழ்நாடு சட்டம் V/1920.

தமிழ்நாடு சட்டம் V/1994.

சட்டம் ஆகியவற்றின்கீழ் செய்யப்பட்ட விதிகள், ஒழுங்குமுறை விதிகள், துணைமுறை விதிகள் ஆகியன எனப் பொருள்படும்;

தமிழ்நாடு சட்டம் 35/1972.

(*b*) ''சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடம்'' என்றால், **1971–**ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்**–**ஊரமைப்புச் சட்டத்தின் **2–**ஆம் பிரிவின் **(23–*a*)** எனும் கூறின்கீழ் குறித்துரைக்கப்பட்ட சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடம் எனப் பொருள்படும்;

தமிழ்நாடு சட்டம் 35/1972.

(*c*) ''விரிவான மேம்பாட்டுத் திட்டம்'' என்றால், சென்னைப் பெருநகர திட்டப்பரப்பிடத்தின்கீழ் உள்ளடங்குகிற பரப்பிடம் எதனையும் பொறுத்த அளவில் **1971–**ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்**–**ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் ஏற்பளிக்கப்பட்ட விரிவான மேம்பாட்டுத் திட்டம் ஒன்று எனப் பொருள்படும்;

(*d*) ''மேம்பாட்டு கட்டுப்பாட்டு விதிகள்'' என்றால், சென்னைப் பெருநகரப் பரப்பிடத்திற்கான மேம்பாட்டு கட்டுப்பாட்டு விதிகள் எனப் பொருள்படும்;

(*e*) ''அரசு'' என்றால் மாநில அரசு எனப் பொருள்படும்;

தமிழ்நாடு சட்டம் IV/1919.
தமிழ்நாடு சட்டம் V/1920.
தமிழ்நாடு சட்டம் 21/1994.
தமிழ்நாடு சட்டம் 35/1972.

(*f*) '' உள்ளாட்சி அதிகார அமைப்பு'' என்றால், தமது அதிகார வரம்புகளின்கீழ் உள்ள பரப்பிடங்களைப் பொறுத்த அளவில் சட்டப்படியான கட்டுப்பாட்டினைச் செலுத்துவதற்கு உரிமைத் தகுதியுள்ளவாறு, **1919–**ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சென்னை மாநகராட்சி அல்லது **1920–**ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட (சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்குள்ளாக அமைந்த) நகராட்சிகள் அல்லது பேரூராட்சிகள் அல்லது **1994–**ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட (சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்குள்ளாக அமைந்த) ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது சிற்றூராட்சிகள் அல்லது **1971–**ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் எனப் பொருள்படும்;

தமிழ்நாடு சட்டம் 35/1972.

(*g*) ''பெரும் திட்டம்'' என்றால் **1971–**ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்**–**ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட சென்னைப் பெருநகர திட்டக் குழுமத்திற்கான பெரும் திட்டம் எனப் பொருள்படும்;

தமிழ்நாடு சட்டம் 35/1972.

(*h*) ''பொதுத் தெரு'' என்றால், **1971–**ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்**–**ஊரமைப்புச் சட்டத்தின் **2–**ஆம் பிரிவின் **(37)–**ஆம் கூறில் பொருள் வரையறை செய்யப்பட்டவாறான பொதுத் தெரு எனப்பொருள்படும்;

(i) ''தண்டனை நடவடிக்கை'' என்றால், நீதிமன்ற ஆணைகளைத் தொடர்ந்து அல்லது பிறவாறு செய்யப்படும் கட்டட இடிப்பு உள்ளடங்கலாக அதிகாரமற்ற மேம்பாட்டுக்கு எதிராக, தொடர்புள்ள சட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்குள்ளாக உள்ளாட்சி அதிகார அமைப்பினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை எனப் பொருள்படும்;

(j) தொடர்பான சட்டம் என்றால்—

தமிழ்நாடு சட்டம் 35/1972.

(i) சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நேர்வில், **1971–**ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்**–**ஊரமைப்புச் சட்டம் எனவும்;

தமிழ்நாடு சட்டம் IV/1919.

(ii) சென்னை மாநகராட்சியின் நேர்வில், **1919–**ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் எனவும்;

தமிழ்நாடு சட்டம் V/1920.

(iii) நகராட்சிகளையும், பேரூராட்சிகளையும் பொறுத்த நேர்வில், **1920–**ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் எனவும்—

தமிழ்நாடு சட்டம் 21/1994.

(*iv*) ஊராட்சி ஒன்றியங்களையும், சிற்றூராட்சிகளையும் பொறுத்த நேர்வில், **1994–**ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் எனவும்; பொருள்படும்**.**

(*k*) அதிகாரமற்ற மேம்பாடு என்றால்**.–**

(*i*) திட்ட அனுமதி அல்லது கட்டட அனுமதி எதிலிருந்தும் மீறிய வகையில்; அல்லது

(*ii*) திட்ட அனுமதி அல்லது கட்டட அனுமதி எதையும் பெறாமல்; அல்லது

(*iii*) பெரும் திட்டத்தின்படி அல்லது ஏற்பளிக்கப்பட்ட விரிவான வளர்ச்சித் திட்டத்தின்படி வகைப்படுத்தப்பட்ட நிலப் பயன்பாட்டிற்கு மீறிய வகையில்; அல்லது

(*iv*) சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்கான மேம்பாடுக் கட்டுப்பாட்டு விதிகளை மீறிய வகையிலும் சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்திற்குள்ளாக இருக்கின்ற பரப்பிடங்களுக்குப் பொருந்தக்கூடிய கட்டட விதிகள், ஒழுங்குமுறை விதிகள், துணைமுறை விதிகள் ஆகியவற்றை மீறிய வகையிலும் பயன்படுத்தப்பட்ட நிலம் எதுவுமோ அல்லது கட்டடம் எதுவுமோ அல்லது மேற்கொள்ளப்படும் கட்டடம் எதனையும் கட்டுவது எனப் பொருள்படும்;

மற்றும் அது பொதுத் தெருக்களிலுள்ள கூவி விற்பவர்களாலும் அத்தெருக்களில் விற்பனை செய்பவர்களாலும் மற்றும் குடிசைப் பகுதிகளில் உள்ள மக்களாலும் செய்யப்படும் அதிகாரமற்ற கையுடைமையையும் உள்ளடக்கும்;

(2) இதில் பயன்படுத்தப்பட்டுள்ள, ஆனால் பொருள் வரையறை செய்யப்படாத சொற்களும், சொற்றொடர்களும் அவற்றுக்கு முறையே 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் –ஊரமைப்புச் சட்டத்திலும், 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திலும் 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திலும், 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலும் குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள்களையே கொண்டிருக்கும்.

தமிழ்நாடு சட்டம் 35/1972.

தமிழ்நாடு சட்டம் IV/1919.

தமிழ்நாடு சட்டம் V/1920.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

நெறிமுறைகள், கொள்கை வழிகாட்டு நெறிமுறைகள் முதலானவற்றை அரசு முடிவு செய்தல்.

**3.** (1) தொடர்பான சட்டம் எதிலுமோ அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள், ஒழுங்குமுறை விதிகள் அல்லது துணைமுறை விதிகள் எவற்றிலுமோ என்ன அடங்கியிருந்தபோதிலும், அரசானது இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து ஓராண்டுக் கால அளவிற்குள்ளாக, சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்தின் மேம்பாடுகள் தொடர்ந்து திட்டமிட்டமுறையில் நடைபெறும் வகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு அதிகாரமற்ற மேம்பாடுகளினால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக நெறிமுறைகள், கொள்கை வழிகாட்டு நெறிமுறைகள் இயலக்கூடிய ஆயத்தவியூக ஏற்பாடுகள் ஆகியவற்றை முடிவு செய்வதற்குச் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து இயலக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும், அதாவது.—

(*a*) பெரும் திட்டம், விரிவான மேம்பாட்டுத் திட்டங்கள் அல்லது திட்ட அனுமதி எதற்கும் இணங்கிய வகையில் அல்லாது பயன்படுத்தப்படும் நிலம்;

(*b*) திட்ட அனுமதியை அல்லது கட்டட அனுமதியை மீறிய வகையில் அல்லது அதன் எல்லைகளுக்கு அப்பால் செய்யப்படும் கட்டுமானம்;

(*c*) திட்ட அனுமதி அல்லது கட்டட அனுமதி இல்லாமல் செய்யப்படும் மேம்பாடு;

(*d*) பொதுத் தெருக்களில் கூவி விற்பவர்கள், சாலை வணிகர்கள், குடிசைப் பகுதியில் உள்ள மக்கள் ஆகியோரால் செய்யப்படும் அதிகாரமற்ற கையுடைமை;

(2) (1)–ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள வகைமுறைகளுக்கு உட்பட்டு, மற்றும் நீதிமன்றம் எதனின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று இருந்தவாறான நிலை, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகாரமற்ற மேம்பாட்டு வகைகளைப் பொறுத்த அளவில் பேணி வரப்படுதல் வேண்டும்.

(3) 2007–ஆம் ஆண்டு ஜூலை 27–ஆம் நாளுக்கு முன்னதாக (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகாரமற்ற மேம்பாட்டு வகைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தொடங்குவதற்கு, தொடர்பான சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது அதிகார அமைப்பு எதனாலும் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மற்றும் மேற்சொன்ன ஓராண்டு கால அளவின்போது தண்டனை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் கூடாது.

இந்த சட்டத்தின் வகை முறைகள் ஒரு சில நேர்வுகளில் பொருந்தாது எனல்.

(4) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள பிற வகைமுறை எதுவும் என்னவாக இருந்தபோதிலும் அரசானது எந்த நேரத்திலும் அந்த ஓராண்டு முடிவடைவதற்கு முன்பாக (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகாரமற்ற மேம்பாட்டு வகைப்பாடுகளைப் பொறுத்த அளவில் **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் அறிவிக்கையின் மூலமாக (2) ஆம் உட்பிரிவிலோ அல்லது நேர்விற்கேற்ப (3)ஆம் உட்பிரிவிலோ கொடுக்கப்பட்ட சலுகையை மீளப் பெறலாம்.

**4.** இந்தச் சட்டத்தின் செயற்பாட்டுக் கால அளவின்போது பின்வரும் அதிகாரமற்ற மேம்பாடு வகைப்பாடுகளைப் பொறுத்த அளவில் 3 ஆம் பிரிவின்கீழ் தீர்வழி எதுவும் வழங்கப்படுதல் கூடாது.—

(*a*) 2007–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27–ஆம் நாளன்றோ அல்லது அதற்கு பின்னரோ தொடங்கப்பட்ட அல்லது தொடரப்பட்ட அதிகாரமற்ற மேம்பாடு எதுவும்;

(*b*) பெரும் திட்டம் அல்லது விரிவான மேம்பாட்டுத் திட்டம் எதனின் வகைமுறைகளை மீறிய வகையில் அல்லது 2007–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27–ஆம் நாளன்றோ அல்லது அதற்கு பின்னரோ சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்தில் எவ்விடத்திலும் செயற்பாடு எதனையும் தொடங்குதல்;

(c) 3–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் (d) கூறின்கீழ் வரும் அத்தகைய நேர்வுகள் நீங்கலாக, பொதுத் தெருக்களில் செய்யப்படும் அதிகாரமற்ற கையுடைமை மற்றும்

(*d*) பொதுத் திட்டம் எதற்காகவும் தேவைப்படும் நிலத்தைப் பெறுவதற்காக அரசின் கொள்கைகளுக்கு இணங்கிய வகையில் குடிசைப் பகுதி மக்களை, கூவி விற்பவர்களை மற்றும் தெருக்களில் விற்பனை செய்பவர்களை அகற்றுதல்.

5. இந்த சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையில் உள்ள இம்மாநிலச் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட பிற சட்டம் எதிலும் அதற்கு முரணாக என்ன அடங்கியிருந்தபோதிலும் செயல்விளைவு கொள்ளுதல் வேண்டும். இந்தச் சட்டம் பிற சட்டங்களுக்கு மேலோங்கி நிற்றல்.

6. அரசானது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதற்காக, தொடர்பான சட்டம் எதனின் கீழும் அமைந்த உள்ளாட்சி அதிகார அமைப்பு எதற்குமோ அல்லது பிற அதிகார அமைப்பு எதற்குமோ தாம் தக்கதெனக் கருதக்கூடிய அத்தகைய பணிப்புரைகளை அவ்வப்போது பிறப்பிக்கலாம், மற்றும், அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடப்பது அத்தகைய உள்ளாட்சி அதிகார அமைப்பு அல்லது பிற அதிகார அமைப்பின் கடமையாக இருத்தல் வேண்டும். பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரம்.

தமிழ்நாடு அவசர சட்டம் 4/2008. 7. (1) 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. நீக்கமும் காப்பும்.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ அல்லது கொடுக்கப்பட்ட பணிப்புரை எதுவுமோ, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ எடுக்கப்பட்டுள்ளதாகவோ அல்லது கொடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 57/2008.**

***தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

**இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–**

**பகுதி–I**

**முன்னுரையாக.**

குறுந்தலைப்பும், தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஏழாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி–II**

**1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

52–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன் பின்பு இப்பகுதியில் 1919–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான), 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின், 52–ஆம் பிரிவில், (1–A) எனும் உட்பிரிவிற்குப் பின்னர் பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் IV/ 1919.

"(1–B). 53–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் (eee) எனும் கூறின்படி மன்ற உறுப்பினர் ஒருவராக இருப்பதற்குத் தகுதியற்றவராக இருக்கிற நபர் ஒருவர் அவ்வாறு தகுதியின்மை அடைந்த தேதியிலிருந்து ஆறு ஆண்டுக் கால அளவு ஒன்றுக்கு மன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.".

53–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** 1919–ஆம் ஆண்டுச் சட்டத்தில், 53–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், (ee) எனும் கூறுக்குப் பின்பு பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(eee) அவர், பட்டியல் சாதியையோ, பட்டியல் பழங்குடியையோ சேர்ந்தவராக இல்லாமல், பட்டியல் சாதிக்கு அல்லது நேர்விற்கேற்ப பட்டியல் பழங்குடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பாரானால்;".

**பகுதி–III.**

**1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

56–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** (இதன் பின்பு இப்பகுதியில் 1971–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான), 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின், 56–ஆம் பிரிவில், (1–A) எனும் உட்பிரிவிற்குப் பின்னர் பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் 15/1971.

"(1–B). 57–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் (ee) எனும் கூறின்படி மன்ற உறுப்பினர் ஒருவராக இருப்பதற்குத் தகுதியற்றவராக இருக்கிற நபர் ஒருவர் அவ்வாறு தகுதியின்மை அடைந்த தேதியிலிருந்து ஆறு ஆண்டுக் கால அளவு ஒன்றுக்கு மன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.".

57–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** 1971–ஆம் ஆண்டுச் சட்டத்தில், 57–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், (e) எனும் கூறுக்குப் பின்பு பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(ee) அவர், பட்டியல் சாதியையோ, பட்டியல் பழங்குடியையோ சேர்ந்தவராக இல்லாமல், பட்டியல் சாதிக்கு அல்லது நேர்விற்கேற்ப பட்டியல் பழங்குடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பாரானால்;".

## பகுதி—IV.

## 1981—ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 25/1981.

58—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** (இதன் பின்பு இப்பகுதியில் 1981— ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான), 1981—ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின், 58—ஆம் பிரிவில்,

(2) எனும் உட்பிரிவிற்குப் பின்னர் பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(2—A). 59—ஆம் பிரிவின் (1)—ஆம் உட்பிரிவின் (ff) எனும் கூறின்படி மன்ற உறுப்பினர் ஒருவராக இருப்பதற்குத் தகுதியற்றவராக இருக்கிற நபர் ஒருவர் அவ்வாறு தகுதியின்மை அடைந்த தேதியிலிருந்து ஆறு ஆண்டுக் கால அளவு ஒன்றுக்கு மன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.".

59—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**7.** 1981—ஆம் ஆண்டுச் சட்டத்தில், 59—ஆம் பிரிவில், (1)—ஆம் உட்பிரிவில், (f) எனும் கூறுக்குப் பின்பு பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(ff) அவர், பட்டியல் சாதியையோ, பட்டியல் பழங்குடியையோ சேர்ந்தவராக இல்லாமல், பட்டியல் சாதிக்கு அல்லது நேர்விற்கேற்ப பட்டியல் பழங்குடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பாரானால்;".

## பகுதி—V.

## 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் V/1920.

49—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**8.** (இதன் பின்பு இப்பகுதியில் 1920—ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான), 1920—ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின், 49—ஆம் பிரிவில்,

(1—A) எனும் உட்பிரிவிற்குப் பின்னர் பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(1—B). 50—ஆம் பிரிவின் (1)—ஆம் உட்பிரிவின் (ddd) எனும் கூறின்படி மன்ற உறுப்பினர் ஒருவராக இருப்பதற்குத் தகுதியற்றவராக இருக்கிற நபர் ஒருவர் அவ்வாறு தகுதியின்மை அடைந்த தேதியிலிருந்து ஆறு ஆண்டுக் கால அளவு ஒன்றுக்கு மன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்.".

50—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**9.** 1920—ஆம் ஆண்டுச் சட்டத்தில், 50—ஆம் பிரிவில், (1) —ஆம் உட்பிரிவில், (dd) எனும் கூறுக்குப் பின்பு பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(ddd) அவர், பட்டியல் சாதியையோ, பட்டியல் பழங்குடியையோ சேர்ந்தவராக இல்லாமல், பட்டியல் சாதிக்கு அல்லது நேர்விற்கேற்ப பட்டியல் பழங்குடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பாரானால்;".

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 58/2008**

***1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் ஐம்பது ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2008–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

172–A எனும் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 172–A எனும் பிரிவில், ''கிராம ஊராட்சியானது தீர்மானிக்கக்கூடிய'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ''மாவட்ட ஆட்சியர் தீர்மானிக்கக்கூடிய'' என்னும் செற்றொடர் அமைக்கப்படுதில் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

172–B எனும் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 172–B எனும் பிரிவில் வரம்புரை உள்ளடங்கலான அப்பிரிவில் இரண்டு இடங்களில் வருகிற, ''கிராம ஊராட்சி'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ''மாவட்ட ஆட்சியர்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

220–எனும் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 220–ஆம் பிரிவில்,—

(1). (2)–ஆம் உட்பிரிவில், ''ஊராட்சி'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''ஊராட்சி அல்லது நேர்விற்கேற்ப மாவட்ட ஆட்சியர்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(2). (2)–ஆம் உட்பிரிவிற்குப் பின்வரும் வரம்புரை சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

**''வரம்புரை:** ஆனால் விளம்பரப் பலகைகளுக்கான உரிமம் ஒவ்வொன்றுக்கும் அரசினால் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் கட்டணங்கள் விதிக்கப்படலாமா,'';

(3). (3)–ஆம் உட்பிரிவில், ''செயலாளர்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''செயலாளர் அல்லது மாவட்ட ஆட்சியர்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(4). (5)–ஆம் உட்பிரிவில், (a)–எனும் கூறில், ''செயலாளர்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''செயலாளர் அல்லது மாவட்ட ஆட்சியர்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

நீக்கமும் காப்பும்.

5. (1) 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/2008.

(2). அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது, பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 59/2008**

***1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1. (1)** இந்தச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஒன்பதாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994. **2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் 96–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், (a)–எனும் கூறில் ''ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைமையர், ஆணையர் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தால் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவர் ஆகியோர் அடங்கிய'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக ''ஊராட்சி ஒன்றிய மன்றத் தலைமையர், துணைத் தலைமையர், ஆணையர் ஆகியோர் அடங்கிய'' என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 96–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்திலோ அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளிலோ என்ன அடங்கியிருந்தபோதிலும், ஊராட்சி ஒன்றியங்களுக்கான நியமனக் குழுக்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் அவ்வாறான பதவியை, 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஒன்பதாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு உடனடி முன்னதாக பதவி வகித்து வந்த உறுப்பினர்கள், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஒன்பதாம் திருத்தச்) சட்டம் தொடங்கிய தேதியன்று நியமனக் குழுக்களின் உறுப்பினர்களாக இருப்பது அற்றுப்போதல் வேண்டும். நியமனக் குழுக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், உறுப்பினர்களாக இருப்பது அற்றுப்போதல்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவை பெற்றது; மற்றும் அது, பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்ட எண் 60/2008**

***விற்பனை வரி தொடர்பான வரி, தண்டத் தொகை அல்லது வட்டித் தொகை நிலுவைகளைத் தீர்வு செய்வதற்கு வகை செய்வதற்காகவும் அது தொடர்பான மற்றும் இடை விளைவான பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்குமானதொரு சட்டம்.***

நீக்கம் செய்யப்பட்ட 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், நீக்கம் செய்யப்பட்ட 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டம், நீக்கம் செய்யப்பட்ட 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1956–ஆம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டம் ஆகியவற்றின்படியான வரி, தண்டத்தொகை அல்லது நேர்விற்பேற்ப வட்டித்தொகை நிலுவைகளைத் தீர்வு செய்வதற்காக வகை செய்வது உகந்ததாக இருப்பதால்; இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

தமிழ்நாடு சட்டம் **1/1959.** தமிழ்நாடு சட்டம் **24/1971.** தமிழ்நாடு சட்டம் **14/1970.** மையச் சட்டம் **74/1956.**

குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1–ஆம் நாளன்றே நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்

**2.** (1) இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,—

(a) ''விண்ணப்பதாரர்'' என்றால் தொடர்புடைய சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான வணிகர் ஒருவர் எனப் பொருள்படும்.

(b) ''வரி, தண்டத் தொகை அல்லது வட்டித்தொகை நிலுவைகள்'' என்றால், 2002–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளுக்கு முன்னதாக கணிப்பு செய்யப்பட்டிருக்கிற மற்றும் இந்தச் சட்டத்தின்படி விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்ட தேதியன்று வசூலிக்கப்படுவதற்கு நிலுவையிலுள்ள,

(i) தொடர்புடைய சட்டத்தின்படி வரிக் கணிப்பின் பேரில் விண்ணப்பதாரர் ஒருவரால் செலுத்தத்தக்க கூடுதல் விற்பனை வரி , மேல் வரி கூடுதல் மேல் வரி, மைய விற்பனை வரி உள்ளடங்கலான வரி; அல்லது

(ii) தொடர்புடைய சட்டத்தின்படி விண்ணப்பதாரர் ஒருவரால் செலுத்தப்படத்தக்க தண்டத் தொகை; அல்லது நேர்விற்கேற்ப

(iii) தொடர்புடைய சட்டத்தின் கீழ் விண்ணப்பதாரர் ஒருவரால் செலுத்தத்தக்க வட்டி தொகை எனப் பொருள்படும்.

(c) '' பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பு'' என்றால் 3–ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்ட அதிகார அமைப்பு என்று பொருள்படும்.

(d) ''அரசு'' என்றால், மாநில அரசு என்று பொருள்படும்.

(e) '' தொடர்புடைய சட்டம்'' என்றால்,

(i) நீக்கம் செய்யப்பட்ட, 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம்; தமிழ்நாடு சட்டம் **1/1959.**

(ii) நீக்கம் செய்யப்பட்ட, 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டம்; தமிழ்நாடு சட்டம் **24/1971.**

(iii) நீக்கம் செய்யப்பட்ட 1970–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்; தமிழ்நாடு சட்டம் **14/1970.**

;

(iv) 1956–ஆம் ஆண்டு மைய விற்பனை வரிச் சட்டம் மைய சட்டம் **74/1956.**

என்று பொருள்படும், மற்றும் அவற்றின்கீழ் செய்யப்பட்ட விதிகளை அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகளை உள்ளடக்கும்.

(2) பொருளிலோ அல்லது தறுவாயிலோ முரணாக ஏதேனும் இருந்தாலன்றி, இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு, பொருள்வரையறை செய்யப்படாமல், உள்ள சொற்றொடர்கள் அனைத்தும், தொடர்புடைய சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அல்லது பயன்படுத்தப்பட்டுள்ள அதே பொருளையே கொண்டிருந்தல் வேண்டும்.

பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பு.

**3.** இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, அரசானது, அறிவிக்கை வாயிலாக, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் 48–ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அதிகார அமைப்புகளை பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்புகளாக நியமிக்கலாம் மற்றும் அத்தகைய அதிகார அமைப்பானது, அரசு அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கக் கூடிய பரப்பிடம் அல்லது பரப்பிடங்களின் மீது அதிகார வரம்பினைச் செலுத்துதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006.

தீர்வுக்கான தகுதியுடைமை

**4.** இந்தச் சட்டத்தின் பிற வகைமுறைகளுக்கு உட்பட்டு, 2002–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளுக்கு முன்னதாக, தொடர்புடைய சட்டத்தின்படி எந்த வரி, தண்டத்தொகை அல்லது வட்டித் தொகை நிலுவைகளைப் பொறுத்த அளவில் வரிக் கணிப்பானது செய்யப்பட்டுள்ளதோ அந்த நிலுவைகளைத் தீர்வு செய்வதற்கான விண்ணப்பத்தினை, விண்ணப்பம் தாக்கல் செய்யப்படும் தேதியன்று, நீதிமன்றம் எதன்முன்பும் மேல்முறையீடு அல்லது சீராய்வு மனு எதுவும் அந்நிலுவைகளுக்கு எதிராக இல்லாத நிலையில் விண்ணப்பதாரர் ஒருவர் செய்யலாம்.

தீர்வு செய்வற்கான விண்ணப்பம்.

**5.** (1) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக அல்லது அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, அவ்வப்போது குறித்துரைக்கக் கூடியவாறு பின்னர் வருகின்ற ஒரு தேதிக்குள்ளாக வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திலும், அத்தகைய முறையிலும் 7–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் செலுத்தத்தக்க தொகையைச் செலுத்தியதற்கான நிரூபணத்துடன், 4–ஆம் பிரிவின் நோக்கத்திற்கான விண்ணப்பம் ஒன்று, விண்ணப்பதாரர் ஒருவரால், பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பிடம் செய்துகொள்ளப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு வரிக் கணிப்பு ஆண்டுக்கும், தனித்தனியாக ஒவ்வொரு விண்ணப்பம் செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) விண்ணப்பதாரர், பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பின் முன்பு அத்தகைய விண்ணப்பத்தினைச் செய்த தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக, எந்த வரிக்கணிப்பு அதிகார அமைப்பு அல்லது மேல்முறையீட்டு அதிகார அமைப்பு அல்லது சீராய்வு அதிகார அமைப்பின் முன்பாக நடவடிக்கை அல்லது மேல் முறையீடு அல்லது நேர்விற்கேற்ப சீராய்வானது தொடர்புடைய சட்டத்தின்படி முடிவுறாததிருக்கிறதோ, அந்த வரிக்கணிப்பு அதிகார அமைப்பின், மேல் முறையீட்டு அதிகார அமைப்பின் அல்லது சீராய்வு அதிகார அமைப்பின் முன்பு (1)–ஆம் உட்பிரிவின்படி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நகல் ஒன்றினை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பதாரரால் செலுத்தத்தக்க தொகையைத் தீர்மானித்தல்.

**6.** (1) பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, 5–ஆம் பிரிவின்படி செய்யப்பட்ட விண்ணப்பத்தில் கொடுக்கபட்ட விவரங்கள் சரியானவை என்பதைத் தொடர்டைய அனைத்துப் பதிவுருக்கள் தொடர்பாகச் சரிபார்த்தல் வேண்டும்; மற்றும் 7–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் செலுத்தத்தக்க தொகையைத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, விண்ணப்பதாரரால், (1)ஆம் உட்பிரிவின்படி தீர்மானிக்கப்பட்ட தொகையில் நூற்றுக்குப் பத்து விழுக்காட்டிற்கு மிகாத அளவில், விண்ணப்பத்துடன் செலுத்தப்பட்ட தொகை குறைவாக இருந்தால், வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பதாரரால் செலுத்தத்தக்க மேலுமான தொகையைக் கோரலாம்.

(3) விண்ணப்பதாரர், 7–ஆம் பிரிவின்படி செலுத்தத் தக்க தொகையில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காட்டினை விண்ணப்பத்துடன் செலுத்தாதிருந்தால், பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது விண்ணப்பத்தினை உடனடியாக நிராகரித்தல் வேண்டும்.

(4). (1) –ஆம் உட்பிரிவின்படி தீர்மானிக்கப்பட்ட தொகையானது முழு ரூபாய்க்கு நெருக்கமாகக் கணக்கிடப்படுதல் வேண்டும்; மற்றும் இந்நோக்கத்திற்காக அத்தகைய தொகையானது ஒரு ரூபாயின் ஒரு பகுதியையும் கொண்டிருக்குமிடத்து, மற்றும் அத்தகைய பகுதியானது ஐம்பது பைசாவுக்கோ அல்லது அதற்கு மேலாகவோ இருந்தால், அடுத்த எண்ணிக்கையான ரூபாயாகக் கணக்கிடப்படுதல் வேண்டும். மற்றும் அத்தகைய பகுதியானது ஐம்பது பைசாவுக்குக் குறைவாக இருந்தால், அது கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதில்லை.

செலுத்தப்படத் தக்கதெனத் தீர்மானிக்கப்படும் தொகைக்குப் பொருந்துகிற வீதம்.

**7.** விண்ணப்பதாரரால் செலுத்தத்தக்க தொகையும் கைவிடப்படவேண்டிய தொகையும் பின்வருமாறு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்:—

(*a*) கணக்குகளைத் தாக்கல் செய்யாததன் காரணமாக நன்தீர்ப்பின் பேரில் கணிக்கப்பட்ட வரி நிலுவைகளுடன் சேர்ந்த நேர் இணையான பணத் தண்டம் வட்டி ஆகிய நிலுவைகள் தொடர்பானதாக அது இருக்குமிடத்து, விண்ணப்பம் செய்யப்படும் தேதியன்று வசூலிப்பதற்கு நிலுவையிலுள்ள வரி நிலுவைகளில் மூன்றிலொரு பங்கினை வரி நிலுவைகளின் பேரில்

ஆண்டொன்றுக்கு நூற்றுக்கு ஆறு விழுக்காடு என்ற அளவில் கணக்கிடப்பட்ட வட்டியுடன் சேர்த்து விண்ணப்பதாரர் செலுத்துதல் வேண்டும்; மற்றும் அவ்வாறான வரியைச் செலுத்துவதன் பேரில், மீதமுள்ள வரி, வட்டி ஆகியனவும் மற்றும் தண்டத் தொகை முழுவதும் கைவிடப்படுதல் வேண்டும்.

(*b*) அந்த ஆண்டுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வரி விவர அறிக்கையின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட வரியைவிட அதிகமாக அமைந்த வரி நிலுவைகளுடன் சேர்ந்த நேர் இணையான தண்டத்தொகை, வட்டி ஆகிய நிலுவைகள் தொடர்பானதாக அது இருக்குமிடத்து, விண்ணப்பம் செய்யப்படும் தேதியன்று வசூலிப்பதற்கு நிலுவையிலுள்ள வரி நிலுவைகளில் மூன்றிலொரு பங்கினை, வரி நிலுவைகளின் பேரில் ஆண்டொன்றுக்கு நூற்றுக்கு ஆறு விழுக்காடு என்ற அளவில் கணக்கிடப்பட்ட வட்டியுடன் சேர்த்து விண்ணப்பதாரர் செலுத்துதல் வேண்டும்; மற்றும் அவ்வாறான வரியைச் செலுத்துவதன் பேரில், மீதமுள்ள வரி, வட்டித் தொகை ஆகியனவும் மற்றும் தண்டத் தொகை முழுவதும் கைவிடப்படுதல் வேண்டும்.

(*c*) அந்த ஆண்டுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வரி விவர அறிக்கையின்படி செலுத்தவேண்டிய வரியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரி நிலுவைகளுடன் சேர்ந்த நேர் இணையான தண்டத்தொகை வட்டித்தொகை ஆகிய நிலுவைகள் தொடர்பானதாக அது இருக்குமிடத்து, வசூலிப்பதற்கு நிலுவையிலுள்ள வரி நிலுவைகள் முழுவதையும் ஆண்டொன்றுக்கு நூற்றுக்கு ஆறு விழுக்காடு வட்டியுடன் சேர்த்து விண்ணப்பதாரர் செலுத்துதல் வேண்டும்; மற்றும் அவ்வாறு செலுத்துவதன் பேரில் மீதமுள்ள வட்டியும் தண்டத்தொகை முழுவதும் கைவிடப்படுதல் வேண்டும்.

(d) தண்டத் தொகை அல்லது வட்டித் தொகை அல்லது அவை இரண்டின் நிலுவைகள் தொடர்பானதாக அது இருக்குமிடத்து மற்றும் விண்ணப்பம் செய்யப்பட்ட தேதியன்று வசூலிப்பதற்கு நேரிணையான வரி நிலுவைகள் எதுவும் நிலுவையில் இல்லாதவிடத்து விண்ணப்பதாரர் தண்டத் தொகையில் நூற்றுக்கு பத்து விழுக்காட்டினையும் வட்டித் தொகையில் நூற்றுக்கு இருபத்தைந்து விழுக்காட்டினையும் செலுத்துதல் வேண்டும்; மீதமுள்ள தண்டத்தொகையும் வட்டித் தொகையும் கைவிடப்படுதல் வேண்டும்.

நிலுவைகளைத் தீர்வு செய்தலும் சான்றிதழை வழங்குதலும்.

8. (1) பெயர் குறிப்பட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, 6–ஆம் பிரிவின் (1)–ஆம் உடபிரிவின்படி தீர்மானிக்கப்பட்ட தொகையைச் செலுத்தியது பற்றி பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, தெளிவுறக் காண்பதன்பேரில், ஆணை ஒன்றின் வாயிலாக வரி, தண்டத் தொகை அல்லது வட்டித்தொகை ஆகியவற்றின் நிலுவைகளத் தீர்த்து வைத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படக்கூடிய வடிவத்தில் சான்றிதழ் ஒன்றினை விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும்; மற்றும் அதன்பேரில் அத்தகைய விண்ணப்பதாரர் அத்தகைய வரி, தண்டத் தொகை அல்லது வட்டித் தொகை நிலுவையின் மீதமுள்ள தொகையைச் செலுத்தும் கடப்பாட்டிலிருந்தும் விடுவிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்தையும் பொறுத்த அளவில், தனித்தனியாக சான்றிதழை வழங்குதல் வேண்டும்.

(2) பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது, எழுத்துருவில் பதிவு செய்யவேண்டிய காரணங்களுக்காக வரி, தண்டத் தொகை அல்லது வட்டித் தொகையைத் தீர்வு செய்ய மறுக்கலாம்:

**வரம்புரை:** ஆனால், இந்த உட்பிரிவின்படியான ஆணை எதுவும், அவ்வாறு ஆணை வழங்க மறுத்ததற்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு நியாயமானதொரு வாய்ப்பினை அந்த விண்ணப்பதாரருக்கு அளிக்காமல், பிறப்பிக்கப்படுதல் கூடாது.

(3) இது குறித்து அரசினால் அறிவிக்கை செய்யப்பட்டவாறான அதிகார அமைப்பானது, பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பினால், (1)–ஆம் உட்பிரிவின்படியான சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள்ளாக, எந்த நேரத்திலும் பதிவுருவில் பார்த்த மாத்திரத்திலேயே தென்படுகின்ற பிழை எதனையும் சரிசெய்து அச்சான்றிதழை மாற்றியமைக்கலாம்:

**வரம்புரை:** ஆனால், விண்ணப்பதாரரை எதிர்மாறாகப் பாதிக்கின்ற அத்தகைய சரி செய்தல் ஆணை எதுவும், அத்தகைய சரி செய்தலுக்கெதிராகக் காரணம் காட்டுமாறு நியாயமான வாய்ப்பு ஒன்றினை அந்த விண்ணப்பதாரருக்கு அளிக்காமல், பிறப்பிக்கப்படுதல் கூடாது.

தீர்வு செய்யப்பட்ட வழக்குகளை மீண்டும் தொடர்வதற்குத் தடை

**9.** 8–ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்று, அது எந்தத்தீர்வு தொடர்பானதாக இருக்கின்றதோ, அந்தத் தீர்வைப் பொறுத்த வரையில் அறுதியானதாக இருத்தல் வேண்டும். அத்தகைய சான்றிதழில் அடங்கிய பொருட்பாடு எதனையும் பொறுத்தவரையில், மறு ஆய்வு அல்லது சீராய்வு நடவடிக்கை எதிலுமோ அல்லது தொடர்புடைய சட்டத்தின்படியான பிற நடவடிக்கை எதிலுமோ மீண்டும் விசாரணையைத் தொடங்குதல் கூடாது.

மேல் முறையீட்டையும் சீராய்வையும் திரும்பப் பெறுதல்.

**10.** தொடர்புடைய சட்டத்தின் வகைமுறை எதிலும் மாறாக என்ன அடங்கியிருந்த போதிலும், 8–ஆம் பிரிவின்படி, சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிற, தொடர்புடைய சட்டத்தின்கீழ் வரிக்கணிப்பு அதிகார அமைப்பு அல்லது மேல்முறையீட்டு அதிகார அமைப்பு அல்லது நேர்விற்கேற்ப சீராய்வு அதிகார அமைப்பிற்கு முன்பாக கால அளவு எதனையும் பொறுத்த அளவில் முடிவுறாது உள்ள நடவடிக்கை அல்லது மேல்முறையீடு அல்லது சீராய்வு எதுவும், விண்ணப்பதாரரால், 5–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பம் செய்யப்பட்ட தேதியிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். இந்தச் சட்டத்தின்படி வரி தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை ஆகியவற்றின் நிலுவைகளைத் தீர்வு செய்வதற்கான விண்ணப்பத்தினைத் தாக்கல் செய்த தேதிக்குப் பின்னர் வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை ஆகியவற்றின் நிலுவைகளைத் தீர்வு செய்யும் காலம் வரையிலும், செலுத்தப்பட்ட தொகையினைத் திரும்பப் பெறுவதற்கான உரிமை கோரிக்கைக்கான விளைவை ஏற்ப்டுத்துகிற வகையில் வரிக் கணிப்பு அதிகார அமைப்பால் அல்லது மேல்முறையீட்டு அதிகார அமைப்பால் அல்லது சீராய்வு அதிகார அமைப்பால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுதல் ஆகாது.

ஒரு சில நேர்வுகளில் அதிகார அமைப்பானது முடிவு செய்வதற்கு முற்படுதல் கூடாது என்பது.

**11.** அதிகார அமைப்பு எதுவும், எந்த வரிக்கணிப்பு ஆண்டினைப் பொறுத்த வரையிலும் 5–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பத்தின் நகல் ஒன்று பெறப்பட்டுள்ளதோ, அந்த வரிக்கணிப்பு ஆண்டு தொடர்பாக தொடர்புடைய சட்டத்தின்படியான நடவடிக்கை அல்லது மேல்முறையீடு அல்லது சீராய்வு எதனையும் முடிவு செய்வதற்கு முற்படுதல் கூடாது.

**வரம்புரை:** ஆனால் 8–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின்படி பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பினால் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றின் மூலமாக விண்ணப்பதாரருக்கு 8–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட சான்றிதழ் ஒன்று மறுக்கப்படுமானால், தொடர்புடைய சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில், அத்தகைய நடவடிக்கை அல்லது மேல்முறையீடு அல்லது சீராய்வினை முடிவு செய்வதற்கு அத்தகைய அதிகார அமைப்பு முற்படுதல் வேண்டும்.

சான்றிதழ் பின்னறவு செய்யப்படுதல்

12. (1). 9–ஆம் பிரிவிலோ அல்லது 10–ஆம் பிரிவிலோ என்ன அடங்கியிருந்தபோதிலும், முக்கியமான தகவலை அல்லது விவரங்களை மறைத்ததன் மூலமாகவோ, அல்லது சரியற்ற அல்லது பொய்யான தகவலை அல்லது விவரங்களைக் கொடுத்ததன் மூலமாகவோ, 8–ஆம் பிரிவின்படி சான்றிதழை விண்ணப்பதாரர் ஒருவர் பெற்றுள்ளார் என்பதாகப் பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்புக்குத் தோன்றுகிறவிடத்து, அத்தகைய சான்றிதழ் வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக் கால அளவிற்குள் அத்தகைய பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அமைப்பானது, எழுத்துருவில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காகவும் மற்றும் விண்ணப்பதாரருக்கு அதற்குரிய காரணம் காட்டுவதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்றினை வழங்கியதற்குப் பின்னரும், 8–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட சான்றிதழைப் பின்னறவு செய்யலாம்.

(2). (1)–ஆம் உட்பிரிவின்படி சான்றிதழ் ஒன்று பின்னறவு செய்யப்பட்டால் அத்தகைய சான்றிதழில் அடங்கக்கூடிய, தொடர்புடைய சட்டத்தின்படியான நடவடிக்கை அல்லது மேல்முறையீடு அல்லது நேர்விற்கேற்ப சீராய்வானது, 9–ஆம் பிரிவின் அல்லது 10–ஆம் பிரிவின் வகைமுறைகளில் என்ன இருந்தபோதிலும் அவ்வாறு பின்னறவு செய்யப்பட்டதின்பேரில், உடனடியாக உயிர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அல்லது பழைய நிலைக்கு கொண்டுவரப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய நடவடிக்கை அல்லது மேல்முறையீடு அல்லது சீராய்வானது இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கை அல்லது மேல்முறையீடு அல்லது சீராய்வில் நிலுவையில் உள்ள வரி, தண்டத்தொகை அல்லது வட்டித்தொகை நிலுவை குறித்து எப்போதுமே, தீர்வு எதுவும் செய்யப்பட்டிராதது போன்று, தொடர்புடைய சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் முடிவு செய்யப்படுதல்வேண்டும்.

(3). (1)–ஆம் உட்பிரிவின்படி ஒரு சான்றிதழ் பின்னறவு செய்யப்பட்ட நேர்வில், 6–ஆம் பிரிவின்படி விண்ணப்பதாரரால் செலுத்தப்பட்ட தொகையானது, பின்னறவு செய்யப்பட்ட சான்றிதழின் கால அளவிற்காகத் தொடர்புடைய சட்டத்தின்படி செலுத்தத்தக்க தொகைக்கான செலுத்தமாகக் கருதப்படுதல் வேண்டும்.

தொடர்புடைய சட்டத்தின்படி அதிகார அமைப்புகளுக்குத் தகவல் அனுப்பப்படுதல் வேண்டும் என்பது.

**13.** தொடர்புடைய சட்டத்தின்படி விண்ணப்பதாரரின்மீது அப்போதைக்கு அதிகார வரம்பு பெற்றுள்ள தொடர்புடைய சட்டத்தின்கீழ் அமைந்த வரிக்கணிப்பு அதிகார அமைப்பு அல்லது மேல்முறையீட்டு அதிகார அமைப்பு அல்லது நேர்விற்கேற்ப சீராய்வு அதிகார அமைப்புக்கு, பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பானது,

(*a*) 5–ஆம் பிரிவின்படி விண்ணப்பதாரர் ஒருவரால் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டது என்ற விவரத்தை;

(*b*) 8–ஆம் பிரிவின்படி பெயர் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்ட அதிகார அமைப்பினால் ஆணை எதுவும் பிறப்பிக்கப்பட்டது என்ற விவரத்தை;

(*c*) 12–ஆம் பிரிவின்படி சான்றிதழ் எதுவும் பின்னறவு செய்யப்பட்டது என்பதான விவரத்தை; மற்றும்

(*d*) அது தேவையானதெனக் கருதக்கூடிய அத்தகைய பிற பொருட்பாடுகளை;

வகுத்துரைக்கப்படக்கூடிய படிவத்திலும் வகுத்துரைக்கப்படக்கூடிய முறையிலும் வகுத்துரைக்கப் படக்கூடிய கால அளவிற்குள்ளாகவும் தெரிவித்தல் வேண்டும்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**14.** இந்த சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசானது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில் ஆணையின் ஒன்றின் வாயிலாக அந்த இடர்பாட்டினை நீக்கலாம்.

**வரம்புரை:** ஆனால் இந்தச் சட்டமானது நடைமுறைக்கு வந்த தேதியிலிருந்து ஓராண்டு முடிவடைந்ததற்குப் பின்னர் அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**15.** (1) அரசானது ஒரு முன்தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையிலோ அல்லது இனி வரும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையிலோ இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) (*a*) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படுதல் வேண்டும். மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தால் அன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(*b*) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தால் அன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்த சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் மற்றும் 14–ஆம் பிரிவின்படி செய்யப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனையடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி, அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அத்தகைய விதியோ அல்லது அறிவிக்கையோ அல்லது ஆணையோ செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப்பேரவை முடிவு செய்யுமாயின், அதன்பின்பு அந்த விதியானது, அல்லது அறிவிக்கையானது அல்லது ஆணையானது அதன் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்; அல்லது நேர்விற்கேற்ப செயல்வடிவம் பெறாது போதல் வேண்டும். எனினும், அவ்வாறான மாறுதல் அல்லது நீக்கம் எதுவும், அந்த விதியின்படி, அல்லது அறிவிக்கையின்படி அல்லது ஆணையின்படி முன்னரே செய்யப்பட்ட செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/2008.

நீக்கமும் காப்பும்

**16.** (1) 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனைவரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும் மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தின்படி செய்யப்படிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்டம் எண் 61/2008**

***1971ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊரமைப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டம் என்று வழங்கப் பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 35/1972.

**2.** (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊரமைப்புச் சட்டத்தின் 56–ஆம் பிரிவில்:— 56–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) (1)–ஆம் உட்பிரிவில், ''அத்தகைய மேம்பாட்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள்'' என்னும் சொற்றொடர் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(ii) (2)–ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(2–A) நிலத்தின் அல்லது கட்டடத்தின் உரிமையாளரோ அல்லது நேர்விற்கேற்ப கையுடைமையாளரோ, (1)–ஆம் உட்பிரின்படி சார்வு செய்யப்பட்ட அறிவிப்பில் கோரப்பட்டவாறு அதில் குறித்துரைக்கப்பட்ட கால அளவிற்குள்ளாக அத்தகைய நிலத்தை அல்லது கட்டடத்தைப் பயன்படுத்துவதை நிறுத்தவில்லையாயின், உரிய திட்ட அதிகார அமைப்பானது, முதல் நோக்கிலேயே மனநிறைவடையுமாயின், 49–ஆம் பிரிவின்படியான விண்ணப்பம் எதுவுமோ அல்லது 79–ஆம் பிரிவின்படியான மேல்முறையீடோ அல்லது நீதிமன்றம் ஒன்றின் முன்பு வழக்கு எதுவுமோ முடிவுறாத நிலையில் இருப்பதைப் பொருட்படுத்தாமல், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் வளாகத்தைப் பூட்டி முத்திரை வைப்பதன் மூலம் அத்தகைய நிலத்தை அல்லது கட்டடத்தைப் பயன்படுத்துவதை நிறுத்திவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். அத்தகைய நிலத்தின் அல்லது கட்டடத்தின் உரிமையாளரோ அல்லது, நேர்விற்கேற்ப கையுடைமையாளரோ அத்தகைய முத்திரை வைக்கப்பட்ட வளாகத்திற்கான பாதுகாப்பிற்கு வகை செய்தல் வேண்டும்''.

(iii) (4)–ஆம் உட்பிரிவில், (a) எனும் கூறில், ''அறிவிப்பு'' என்னும் சொல்லுக்குப் பின்பு, ''(2) ஆம் உட்பிரிவின் (iii) ஆம் கூறினால் உள்ளடக்கப்பட்டுள்ள நேர்வுகள் தவிர'' என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 57–ஆம் பிரிவில்,–(1) (2) ஆம் உட்பிரிவிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது: 57–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

'' (2) (1) ஆம் உட்பிரிவின்படி அறிவிப்பு சார்வு செய்யப்படிருக்கிறவிடத்து, உரிமையாளரோ அல்லது மேம்பாடு எதனையும் நிறைவேற்றுகிற நபரோ, அத்தகைய அறிவிப்பை சார்வு செய்த தேதியிலிருந்து மேம்பாட்டுப் பணியை நிறுத்திவிட்டு, நிறுத்திவைத்த பொருண்மையை உரிய திட்ட அதிகார அமைப்பிற்குத் தெரிவித்தல் வேண்டும்''.

(2) (2)–ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவுகள் சேர்க்கப்படுதல் வேண்டும், அவையாவன:

''(3) (1)–ஆம் உட்பிரிவின்படி சார்வு செய்யப்பட்ட அறிவிப்பில் கோரப்பட்டுள்ளவாறு உரிமையாளரோ அல்லது மேம்பாட்டுப் பணியை நிறைவேற்றும் நபரோ மேம்பாட்டுப் பணியை நிறுத்தவில்லையானால்,—

(*a*) உரிய திட்ட அதிகார அமைப்பானது, (1)–ம் உட்பிரிவின்படி சார்வு செய்யப்பட்ட அறிவிப்பிற்குப் பின்னர் கட்டப்பட்ட கட்டடத்தின் அந்தப் பகுதியினை அகற்றுமாறு ஏழு நாட்களுக்குக் குறையாமல் இருக்கும்படியான அத்தகைய காலஅளவிற்குள்

அவரைக் கோருகிறவாறு, உரிமையாளருக்கு அறிவிப்பு ஒன்றைச் சார்வு செய்யலாம். அதில் குறித்துவைக்கப்பட்ட கால அளவிற்குள் அந்தப் பணிப்பாணைக்கு இணங்கி நடக்கவில்லையாயின், உரிய திட்ட அதிகார அமைப்பானது, (1)–ஆம் உட்பிரிவின்படி சார்வு செய்யப்பட்ட அறிவிப்பிற்குப் பின்னர் கட்டப்பட்ட கட்டடத்தின் அந்தப் பகுதியினைத் தகர்த்துவிட்டு, இதன்பொருட்டு செய்ய நேரிட்ட செலவுகளின் தொகையினை, நில வருவாய் நிலுவை ஒன்று போன்று வசூலிப்பதற்கான உரிமையை தனிப்பட ஒதுக்கி வைத்துக்கொள்ளலாம்.

(b) உரிய திட்ட அதிகார அமைப்பானது, அத்தகைய மேம்பாட்டுப் பணிக்காக பயன்படுத்தப்படுவதும் மேம்பாட்டுப் பணிக்காக நிலத்தில் வைக்கப்படிருந்ததுமான கட்டுமானப் பொருள், கருவி, எந்திரம், தளவாடங்கள், சாரக்கட்டு, ஊர்தி அல்லது பிற பொருள் எதனையும் கைப்பற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(c) அவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருள், கருவி, தளவாடங்கள், சாரக்கட்டு, ஊர்தி அல்லது பிற பொருள் உரிய அதிகார அமைப்பினால் பறிமுதல் செய்யப்பட்டு வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் ஏலத்தில் விற்பனை செய்யப்படலாம், அந்த விற்பனைத் தொகையானது, நிதியக் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். பறிமுதல் செய்யப்பட்ட பொருள், கருவி, தளவாடங்கள், சாரக்கட்டு, ஊர்தி அல்லது பிற பொருள் மீதும் விற்பனைத் தொகைமீதும் உரிமையாளராலோ பிற நபர் எவராலுமோ உரிமைக் கோரிக்கை எதுவும் செய்யப்படுதலாகாது.

(4) 56–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் (a) முதல் (d) வரையிலான கூறுகளில் விவரிக்கப்பட்டவாறான மேம்பாட்டுப்பணி நிறைவேற்றப்படுகிறவிடத்து, திட்ட அதிகார அமைப்பானது, இந்தச் சட்டத்தின்படி கோரப்பட்டவாறான உரிய திட்ட அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட திட்ட அனுமதியை முன்னிடும் வரை, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில், வளாகத்தைப் பூட்டி முத்திரை வைக்கப்படுவதன்மூலம் மேம்பாட்டுப் பணியை நிறுத்தி வைக்கவும் நடவடிக்கை எடுக்கலாம்.

(5) உரிமையாளரோ அல்லது மேம்பாட்டுப் பணியை நிறைவேற்றும் நபரோ (1)–ஆம் அல்லது (3)–ஆம் உட்பிரிவின்படி சார்வு செய்யப்பட்ட அறிவிப்புகளில் கோரப்பட்டுள்ளவாறு அதில் குறித்துரைக்கப்பட்ட கால அளவுக்குள் இணங்கி நடக்கவில்லையாயின், உரிய திட்ட அதிகார அமைப்பானது அறிவிப்புக்கு இணங்கி நடக்காததற்காக உரிமையாளர்மீது குற்ற வழக்குத் தொடரலாம்.

(6) 56–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் (a) முதல் (d) வரையிலான கூறுகளில் விவரிக்கப்பட்டவாறான மேம்பாட்டுப் பணியானது நிறுத்தப்படுமாயின், 56–ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆகிய உட்பிரிவுகளின்படியான வகைமுறைகள் பொருந்தும்''.

**4.** முதன்மைச் சட்டத்தின் 80 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

80–A எனும் பிரிவைப் புகுத்துதல்.

**80-A அரசின் சிறப்பு அதிகாரங்கள்**

(1) ''80–ஆம் பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், அரசானது, விண்ணப்பத்தின் பேரில், 56–ஆம் பிரிவின் (2–A) எனும் உட்பிரிவின்படியோ அல்லது 57–ஆம் பிரிவின் (4)–ஆம் உட்பிரிவின்படியோ வளாகத்தை முத்திரை வைப்பது பொறுத்த உரிய திட்ட அதிகார அமைப்பின் பதிவுருக்களைக் கோரிப்பெற்று ஆராய்ந்து பார்க்கலாம்; மற்றும், எந்த நேர்விலும், அத்தகைய நடவடிக்கை அல்லது முடிவு எதுவும் மாற்றப்படவோ நீக்கப்படவோ எதிராக மாற்றவோ அல்லது மறுபரிசீலனைக்காகத் திருப்பி அனுப்பப்படவோ வேண்டுமென அரசுக்குத் தோன்றுமானால், அது அதன்படியே ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

**முதலாம் வரம்புரை:–**

ஆனால், இந்தப் பிரிவின்படி அதிகாரங்களைச் செலுத்துவதற்காக அரசுக்கு அனுப்பப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும், முத்திரை வைத்த தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் முன்னிடப்படுதல் வேண்டும்.

**இரண்டாம் வரம்புரை:—**

மேலும், சீராய்வுக்கான அத்தகைய விண்ணப்பமானது, அந்த விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் அரசினால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி நபரெவருக்கும், அவருக்கு முறையீடு செய்து கொள்வதற்கான வாய்ப்பு ஒன்றினை நல்கினாலன்றி அவருக்கு ஊறுவிளைவிக்கும் ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதலாகாது.

(3) அரசானது, அது பொறுத்து (1)—ஆம் உட்பிரிவின்படியான அதிகாரங்களைச் செலுத்தும் வரையில், தாம் பொருத்தமென கருதும் அத்தகைய **இடைக்கால** ஆணையைப் பிறப்பிக்கலாம்.

101—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 101—ஆம் பிரிவில், "சட்டமுறையான நீதிமன்றம் எதிலும்" என்ற சொற்றொடருக்குப் பின்பு, "மற்றும் இந்தச் சட்டத்தின் 56—ஆம் பிரிவின்படியோ அல்லது 57—ஆம் பிரிவின்படியோ திட்ட அதிகார அமைப்பினால் நபர் எவருக்கும் சார்வு செய்யப்பட்ட அறிவிப்புகளுக்கு எதிராக நீதிமன்றம் எதனாலும் உறுத்துக்கட்டளை எதுவும் வழங்கப்படுதலாகாது" என்ற சொற்றொடர் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்டம் எண் 62/2008**

**1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2008–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

2. 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் XIV எனும் அத்தியாயத்திற்குப் பின்னர், பின்வரும் அத்தியாயமானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– XIV-A எனும் புதிய அத்தியாயத்தைப் புகுத்துதல்.

**"அத்தியாயம் XIV-A.**

**குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புமுறைச் சங்கங்களுக்குப் பொருந்தத்தக்க சிறப்பு வகைமுறைகள்.**

136–A. *அத்தியாயத்தின் பொருந்துகை.*—இந்த அத்தியாயம் குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புமுறைச் சங்கங்களுக்கு மட்டுமே பொருந்துதல் வேண்டும்.

136–B. *இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் மேலோங்கி நின்று செயல்விளைவு கொண்டிருத்தல்.*— இந்தச் சட்டத்தின் பிற அத்தியாயம் ஏதொன்றிலும் அல்லது அதன்படி உருவாக்கப்பட்ட விதிகளில் அல்லது அதன்படி வெளியிடப்பட்ட பதிவுபெற்ற சங்கம் எதனின் துணை விதிகளில் அல்லது ஆணைகளில் முரணாகவோ அல்லது ஒவ்வாததாகவோ என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள், குறுகியக் காலக் கூட்டுறவு கடன் அமைப்புமுறைச் சங்கத்தைப்பொறுத்து மேலோங்கி நின்று செயல்விளைவு கொண்டிருத்தல் வேண்டும்

136–C. *பொருள்வரையறைகள்.*—(1) இந்த அத்தியாயத்தில், தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,–

(*a*) ''மூலதன இடர் வரவினை எதிர்நோக்கி அதற்குச் சமமான சொத்திருப்பை வைத்திருப்பதற்கான விகிதம்'' என்பது, சேம வங்கியினால் அவ்வப்போது வரையறுக்கப்படும் முதலீடு குறித்த தேவையான நெறிமுறைகள் என்று பொருள்படும்;

(*b*) ''மையக் கூட்டுறவு வங்கி'' என்பது, வங்கித் தொழிலின் அலுவலில் ஈடுபட்டுள்ள ஒரு மையச் சங்கம் என்று பொருள்படும்;

(*c*) ''கூட்டிணைவுச் சங்கம்'' என்பது, ஒரேமாதிரி வகையினதான அல்லது வகைப்பாட்டினதான தொடக்கநிலைச் சங்கங்கள் இணைக்கப்பட்டிருக்கின்ற உச்சநிலைச் சங்கம் ஒன்று என்றோ அல்லது ஒரே மாதிரி வகையினதான அல்லது வகைப்பாட்டினதான தொடக்கநிலைச் சங்கங்கள் இணைக்கப்பட்டிருக்கிற மையச் சங்கம் ஒன்று என்றோ பொருள்படும்;

(*d*) ''தேசிய வங்கி'' என்பது 1981–ஆம் ஆண்டு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கிச் சட்டத்தின் (மையச் சட்டம் 61/1981) 3–ஆம் பிரிவின்படி நிறுவப்பட்ட வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி என்று பொருள்படும்;

(*e*) ''தொடக்கநிலை வேளாண் கடன் சங்கம்'' என்பது, **1949—**ஆம் ஆண்டு வங்கித்தொழில் முறைப்படுத்துதல் சட்டத்தின் (மையச் சட்டம் X/**1949**) **56—**ஆம் பிரிவுடன் சேர்த்து படிக்கப்படும் **5—**ஆம் பிரிவின் (cciv) எனும் கூறின்படி பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளவாறான ஒரு கூட்டுறவுச் சங்கம் என்று பொருள்படும்;

(*f*) ''சேம வங்கி'' என்பது, **1934—**ஆம் ஆண்டு சேம வங்கிச் சட்டத்தின் (மையச் சட்டம் II/**1934**) **3—**ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட இந்திய சேம வங்கி என்று பொருள்படும்;

(*g*) ''குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புமுறைச் சங்கம்'' என்பது, உச்ச நிலையில், மைய நிலையில் அல்லது தொடக்க நிலையில் உள்ள குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் சங்கம் என்று பொருள்படும்; மற்றும் மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, ஒரு மையக் கூட்டுறவு வங்கி மற்றும் ஒரு தொடக்க வேளாண் கடன் சங்கம் ஆகியவற்றை உள்ளடக்கும்;

(*h*) ''மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி'' என்பது, வங்கித் தொழில் அலுவலில் ஈடுபட்டிருக்கும் ஒரு தலைமைச் சங்கம் என்று பொருள்படும்.

136—D. *குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புமுறை சங்கங்களுக்கும் பொருந்தத்தக்க சிறப்பு வகைமுறைகள்.—*

**(1)** (*a*) தொடக்கநிலை வேளாண் கடன் சங்கம் ஒன்றில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியான காலஅளவு ஒன்றிற்கு, ஐயாயிரம் ரூபாய் குறைந்தபட்ச வைப்பீடோ அல்லது அவ்வப்போது அரசினால் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய குறைந்தபட்ச பணத் தொகையோ வைத்திருக்கும் வைப்பீட்டாளர் ஒருவர், பதிவுபெற்ற சங்கத்தின் துணை விதிகளில் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச பங்கு மூலதனத்தைச் செலுத்தி **21** ஆம் பிரிவின்படி அதன் ஓர் உறுப்பினராதல் வேண்டும் மற்றும் முழு உறுப்பினர்நிலை, வாக்களிக்கும் உரிமைகள் ஆகியவற்றைக் கொண்டிருப்பார் மற்றும் சங்க உறுப்பினருக்கானத் தள்ளுபடி, மிகைச் சம்பளம் மற்றும் ஆதாயப்பங்கு ஆகியவற்றிற்குத் தகுதியுடையவராவார்.

(*b*) தனியொருவராகவோ அல்லது குழுவாகவோ கடன்பெறுவோர், **21—**ஆம் பிரிவின்படி பதிவுபெற்ற சங்கத்தின் ஓர் உறுப்பினராக ஆவதற்கு உரிமை கொண்டிருப்பர்.

(*c*) **21—**ஆம் பிரிவின்படி ஓர் உறுப்பினராக ஆகியிருக்கும் குழுவைச் சேர்ந்த வைப்பீட்டாளர் அல்லது குழுவைச் சேர்ந்து கடன் பெறுபவர் ஒவ்வொருவரும் அக்குழுவினால் பெயர் குறிப்பிடப்படும் ஒரு சார்பாளர்மூலமாக வாக்களிப்பதற்கு உரிமை கொண்டவராவார்.

**(2)** குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புமுறைச் சங்கம் ஒன்று, பின்வரும் நோக்கெல்லைகள் உள்ளடங்கலான அனைத்து நிதியியல் மற்றும் உள் நிருவாகப் பொருட்பாடுகளில் சுயமாக இயங்கும் திறன் கொண்டிருத்தல் வேண்டும்:—

(*i*) சேம வங்கியினால் வெளியிடப்படும் வழிகாட்டு நெறிகளுக்கிணங்க வைப்பீடுகள் மற்றும் கடன்கள் மீது வட்டி வீதங்கள்;

(*ii*) கடன் பெறுதல் மற்றும் முதலீடு செய்தல்;

(*iii*) கடன் கொள்கைகள் மற்றும் தனியொருவராகக் கடன்பெறுபவர் மீதான முடிவுகள்;

(*iv*) பணியாளர்கள் கொள்கை, பணியாளர்களை வழங்குதல், ஆளெடுப்பு, பணியாளர் தொகுதியினருக்கான நியமனம் மற்றும் பணியூதியம்; மற்றும்

(*v*) உள் நிர்வாகக் கட்டுப்பாட்டு முறைகள், தணிக்கையாளர்களின் நியமனம் மற்றும் தணிக்கையாளருக்கான பணியூதியம்.

**(3)** குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புமுறைச் சங்கம் எதனின் பங்கு முதலில் அரசின் பங்களிப்பானது, நூற்றுக்கு இருபத்தைந்து விழுக்காட்டிற்கு மேற்படுதலாகாது; மற்றும் அரசோ அல்லது குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்புமுறைச் சங்கமோ அரசின் பங்களிப்பினை அதன் விருப்பப்படி மேலும் குறைக்கலாம்.

(4) (*a*) மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் அல்லது ஒரு மையக் கூட்டுறவு வங்கியின் பங்கு முதலில் அரசு பங்களிப்பு செய்திருக்குமாயின் அதன் நிருவாகக் குழுவில் அரசின் ஒரே ஒரு நியமனதாரர் மட்டுமே இருத்தல் வேண்டும்.

(*b*) தொடக்க நிலை வேளாண் கடன் சங்கம் ஒன்றின் பங்கு முதலுக்கு அரசின் பங்களிப்பினைப் பொருட்படுத்தாமல் அதன் நிருவாகக் குழுவில் அரசின் நியமனதாரர் எவரும் இருத்தலாகாது.

(5) குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புமுறைச் சங்கம் ஒன்று ஏற்கெனவே கட்டமைப்பு முறையுடன் இருந்து வருவதையும் வேறொரு கூட்டிணைவுச் சங்கத்துடன் இணைந்து இருப்பதையும் மேற்சொன்ன குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு முறைச் சங்கத்தின் பெயர்ப் பலகையில் காணுமாறு வைத்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு மேற்சொன்ன குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புமுறைச் சங்கமானது தம் விருப்பத் தேர்வின்படி ஒரு கூட்டிணைவுச் சங்கம் ஒன்றுடன் இணைத்துக் கொள்ளலாம் அல்லது இணைப்பிணைத் துண்டித்துக் கொள்ளலாம்.

(6) குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புமுறைச் சங்கம் ஒன்று எந்தப் படிநிலையிலும் உள்ளே வருவதற்கும் அல்லது வெளியே செல்வதற்கும் உரிமை பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் அதன் செயல்பாடுகளுக்காக, புவியியல் எல்லைகளைப் பொறுத்த அளவில் கட்டாயக் கட்டுப்பாடுகள் எவையும் இருத்தல் ஆகாது.

(7) குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புமுறைச் சங்கம் ஒன்று, சேம வங்கியின் வழிகாட்டு நெறிகளுக்கு உட்பட்டு, தன் நிதியை, சேம வங்கியினால் முறைப்படுத்தப்படும் வங்கி அல்லது நிதி நிறுவனம் எதிலும் மற்றும் கட்டாயத் தேவையாக அது இணைந்திருக்கும் கூட்டிணைவுச் சங்கத்தில் செய்ய வேண்டும் என்பதாக அல்லாமல், முதலீடோ அல்லது வைப்பீடோ செய்யலாம்.

(8) குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஒன்று, சேம வங்கியினால் முறைப்படுத்தப்படும் வங்கி அல்லது நிதி நிறுவனம் எதிலிருந்தும் கடன்கள் பெறலாம் மற்றும் தேசிய வங்கியிலிருந்தோ பிற நிதி நிறுவனம் எதிலுமிருந்துமோ நேரடியாகவோ அல்லது சேம வங்கி முறைப்படுத்தும் நிதி நிறுவனம் எதன் மூலமாகவோ மற்றும் கட்டாயத் தேவையாக, அது இணைந்திருக்கும் கூட்டிணைவுச் சங்கத்திலிருந்து பெறுதல் வேண்டும் என்பதாக அல்லாமல், மீண்டும் நிதி பெறலாம்.

(9) தொடக்கநிலை வேளாண் கடன் சங்கம் ஒன்று, தேசிய வங்கியுடன் கலந்தாய்வு செய்த பின்பு பதிவாளரால் உருவாக்கப்படும் வழிகாட்டு நெறி முறைகளுக்கு இணங்கிய வகையில் பங்கு ஆதாயம் வழங்கலாம்.

(10) அரசோ அல்லது பதிவாளரோ குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புமுறைச் சங்கம் எதனையும் அதன் நிகர மதிப்பினை அல்லது சொந்த நிதியங்களை மேம்படுத்துவதற்குத் தேவைப்படுபவை அல்லாத பிற நிதியம் எதற்கும் பங்களிக்கும்படி பணிப்பதற்கு அதிகாரங்கள் கொண்டிருத்தலாகாது.

(11) நபர் எவரும்—

(*i*) மைய கூட்டுறவு வங்கி ஒன்றின் அல்லது மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் நிருவாகக் குழுவில் ஒரு தொடக்கநிலை வேளாண் கடன் சங்கமாக அல்லாத பிற சங்கம் ஒன்றைச் சார்பாற்றம் செய்யும் நபராக இருப்பாராயின், அவர் எந்தச் சங்கத்தை சார்பாற்றம் செய்கிறாரோ அந்தச் சங்கம் தொண்ணூறு நாட்களுக்கு மேற்படும் ஒரு கால அளவிற்கு அத்தகைய வங்கியின் செலுத்தங்கள் குறித்து தவறுகை ஒன்றைச் செய்திருக்குமாயின்;

(*ii*) ஒரு தொடக்கநிலை வேளாண் கடன் சங்கத்திற்கான செலுத்தங்கள் குறித்து தவறுகை ஒன்று செய்திருக்கும் அல்லது ஒரு மையக் கூட்டுறவு வங்கி ஒன்றின் அல்லது மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் நிருவாகக் குழுவில் தொடக்கநிலை வேளாண் சங்கமொன்றைச் சார்பாற்றம் செய்கிற ஒரு நபராக இருந்து, அவர் எந்தச் சங்கத்தைச் சார்ப்பாற்றம் செய்கிறாரோ அந்தச் சங்கம் ஓர் ஆண்டிற்கு மேற்பட்ட ஒரு கால அளவிற்கு அத்தகைய வங்கியின் செலுத்தங்கள் குறித்து தவறுகை ஒன்றைச் செய்திருக்குமாயின் அந்தத் தவறுகை தீர்வு செய்யப்பட்டாலன்றி;

(*iii*) எந்த ஒரு சங்கத்தின் குழு கலைத்துக் கைக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அந்தச் சங்கத்தைச் சார்பாற்றம் செய்கிற நபராக இருப்பாராயின்,

குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு முறைச் சங்கம் ஒன்றின் நிருவாகக் குழுவின் ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுதலோ, பெயர் குறித்து நியமிக்கப்படுதலோ, இணைந்து தேர்வு செய்யப்படுதலோ அல்லது தொடர்ந்து இருந்து வர அனுமதிக்கப்படுதலோ ஆகாது.

(12) (*a*) மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் மற்றும் மைய கூட்டுறவு வங்கிகளின் நிருவாகக் குழுவினைக் கலைத்துக் கைக்கொள்வதானது சேம வங்கியுடன் முன் கலந்தாய்வு செய்து மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்.

(*b*) ஒரு தொடக்கநிலை வேளாண் கடன் சங்கம் ஒன்றின் நிருவாகக் குழுவினைக் கலைத்துக் கைக்கொள்வதானது பின்வரும் காரணங்களின் பேரில் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்:—

(*i*) தொடக்கநிலை வேளாண் கடன் சங்கம் தொடர்ச்சியான மூன்று ஆண்டுகளுக்கு இழப்புகள் அடையுமாயின்; அல்லது

(*ii*) கடுமையான நிதி முறைகேடுகளோ, மோசடிகளோ கண்டறியப் பட்டிருக்குமாயின்; அல்லது

(*iii*) இந்த விளைவை ஏற்படுத்துகிற வகையில் நீதிமுறை பணிப்பாணைகள் இருக்குமாயின்; அல்லது

(iv) தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு கோரெண் அளவிற்கு இல்லாமல் உறுப்பினர் எண்ணிக்கை குறைவாக இருக்குமாயின்,

(13) (*a*) பதிவாளர், குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு முறைச் சங்கத்திற்கான தேர்தல்களை, இருந்துவரும் நிருவாகக் குழுவின் காலஅளவு முடிவுறுவதற்கு முன்பு நடத்துதல் வேண்டும்.

(*b*) பதிவாளர், குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு முறைச் சங்கம் ஒன்றிற்கு கலைத்துக் கைக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் தேர்தல்களை நடத்துதல் வேண்டும்:

*வரம்புரை:* ஆனால், கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளில், அரசு, அத்தகைய தேர்தல்களை கலைத்துக்கைக்கொண்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்குள் நடத்த அனுமதிக்கலாம்.

(*c*) இந்தச் சட்டத்தின்படி கலைத்துக்கைக்கொள்ளப்பட்டிருக்கும் தொடக்கநிலை வேளாண் கடன் சங்கம் ஒன்றின் நிருவாகக் குழு உறுப்பினர் ஒருவர், கலைத்துக் கைக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் காலஅளவு ஒன்றிற்கு மீண்டும் தேர்தலில் போட்டியிட உரிமைகொண்டவராகார்.

(14) (*a*) குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்புமுறைச் சங்கம் ஒன்றின் துணை விதிகள் அல்லது துணை விதிகளுக்கான திருத்தம் எதுவும் விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் பதிவாளரால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(*b*) கருதப்படும் துணை விதிகளோ அல்லது துணை விதிகளுக்கான திருத்தங்களோ இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கும் முரணாக இருக்கின்றன என்று பதிவாளர் தெளிவுறக் காண்பாராயின் அவர், விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அதன்பேரில் தம் காரணங்களை உரியவாறு பதிவுசெய்து அதனை ஏற்க மறுத்துத் தள்ளி விடுதல் வேண்டும்.

(15) தேசிய வங்கியுடன் கலந்தாய்வு செய்த பின்னர் மூலதன இடர்வரவினை எதிர்நோக்கி அதற்குச் சமமான சொத்திருப்பை வைத்திருப்பதற்கான விகிதம் உள்ளடங்கலான அறிவார்ந்த நெறிமுறைகள் அனைத்து முதன்மை வேளாண் கடன் சங்கங்களுக்கும் பதிவாளரால் வகுத்துரைக்கப்படுதல் வேண்டும்.

(16) சேம வங்கியினால் வரையறுக்கப்பட்ட அளவுகோலை நிறைவு செய்யாத மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் அல்லது மையக் கூட்டுறவு வங்கிகளின் இயக்குநர்களும் தலைமை நிருவாக அலுவலர்களும் சேம வங்கியின் அல்லது தேசிய வங்கியின் பரிந்துரையின் பேரில் பதிவாளரால் அல்லது நேர்விற்கேற்ப, நியமன அதிகாரியால் அகற்றப்படுதல் வேண்டும்.

(17) (*a*) மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் மற்றும் மையக் கூட்டுறவு வங்கிகளின் நிருவாகக் குழுவில் சேம வங்கியினால் வரையறுக்கப்படக்கூடிய அத்தகைய களப்பிரிவுகளில் தனியறிவோ பட்டறிவோ கொண்டிருக்கும் தொழிலாற்றுநர்கள் அத்தகைய எண்ணிக்கையில் இருத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய எண்ணிக்கையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள் சேம வங்கியினால் வரையறுக்கப்பட்ட தனியறிவோ பட்டறிவோ பெற்றிருக்கவில்லை என்று சேம வங்கி அல்லது தேசிய வங்கி கருதுகிற நேர்வில், அத்தகைய மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் அல்லது, நேர்விற்கேற்ப, மையக் கூட்டுறவு வங்கியின் நிருவாகக் குழுவானது,—

(i) இந்தச் சட்டத்தின்படியோ அதன்படி வகுக்கப்பட்ட விதிகளின்படியோ துணைவிதிகளிலோ நிருவாகக் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் வரம்பினை;

(ii) அத்தகைய தொழிலாற்றுநர் சங்கத்தின் ஓர் உறுப்பினராக இருக்கிறாரா, இல்லையா என்பதைப்

பொருட்படுத்தாமல் முழுவாக்குரிமைகளுடனும் அத்தகைய எண்ணிக்கையிலான தொழிலாற்றுநர்களை இணைத்து தேர்வு செய்தல் வேண்டும்.

(*b*) சேம வங்கியினால் வரையறுக்கப்பட்டவாறான தேவையான அறிவோ பட்டறிவோ கொண்டிராமல் இந்த உட்பிரிவின் (a) கூறின்படி நபர் எவரும் நிருவாகக் குழுவின் ஓர் உறுப்பினராக இணைந்து தேர்வு செய்யப்பட்டிருக்கிறார் எனச் சேம வங்கி கருதுமாயின், சேம வங்கியினாலோ தேசிய வங்கியினாலோ அறிவுரை வழங்கப்படுவதன் பேரில், அவர்தம் தரப்பை எடுத்துரைப்பதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்று நல்கியதற்குப் பின்னர் அவர் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

(18) பதிவாளர், மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் மற்றும் மையக் கூட்டுறவு வங்கிகளின் கணக்குகளை தேசிய வங்கியினால் ஏற்பளிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் ஒன்றிலிருந்து அத்தகைய வங்கியினால் நியமிக்கப்பட்ட பட்டயக் கணக்கர்களால் தணிக்கை செய்யப்பட்டு, உறுதிச் சான்றிளிக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

(19) பதிவாளர், சேம வங்கியினால் வரையறுக்கப்பட்ட முறையிலும் வடிவத்திலும், சேம வங்கியினால் கேட்டுக்கொள்ளப்படுவாரானால், மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் அல்லது ஒரு மையக் கூட்டுறவு வங்கியின் சிறப்புத் தணிக்கை நடத்துவதற்கு உறுதி செய்தல் வேண்டும் மற்றும் குறிக்கப்பட்ட காலத்திற்குள் சேம வங்கிக்கு அறிக்கை அளித்தலும் வேண்டும்.

(20) (*a*) பதிவாளர், மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மையக்கூட்டுறவு வங்கிகளின் நிருவாகக் குழுவினைக் கலைத்துக் கைக்கொள்வதற்குப் பரிந்துரை வழங்குதல் மற்றும் அந்த வங்கிகளைக் கலைத்தல் உள்ளடங்கலாக மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மையக் கூட்டுறவு வங்கிகளின் நேர்வில், சேம வங்கியின் முறைப்படுத்தும் விதியமைப்புகள் சேம வங்கியினால் அறிவுரை வழங்கப்பட்டவாறு ஒருமாத காலத்திற்குள் செயற்படுத்தப்படுகின்றன என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

(*b*) பதிவாளர், கலைப்பு அலுவலரோ அல்லது நேர்விற்கேற்ப, சொத்தாட்சியரோ, அவ்வாறு கலைத்தலுக்கு அல்லது கலைத்துக் கைக்கொள்ளலுக்கு சேம வங்கியினால் அவ்வாறு அறிவுரை வழங்கப்பட்ட நிலையில் இரண்டு மாதங்களுக்குள் நியமிக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

(*c*) மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் அல்லது ஒரு மையக் கூட்டுறவு வங்கியின் தலைமை நிருவாக அலுவலர், சேம வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட தகுதி அளவுகோல்களை நிறைவு செய்யவில்லை என்று சேம வங்கியோ தேசிய வங்கியோ கருதுமாயின், பதிவாளர், சேம வங்கியினால் அல்லது தேசிய வங்கியினால் அவ்வாறு அறிவுரை வழங்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் தலைமை நிருவாக அலுவலர் அகற்றப்படுவதை பதிவாளர் உறுதி செய்தல் வேண்டும்.

(*d*) சேம வங்கியினால் வரையறுக்கப்படக் கூடிய அத்தகைய களப்பிரிவுகளில் தேவைப்படும் தனியறிவோ பட்டறிவோ கொண்டிராமல் நபர் ஒருவர் நிருவாகக் குழுவின் ஓர் உறுப்பினராக இணைந்து தேர்வு செய்யப்பட்டிருக்கிறார் என்று சேம வங்கியோ தேசிய வங்கியோ கருதுமாயின், பதிவாளர், சேம வங்கியினாலோ தேசிய வங்கியினாலோ அறிவுரை வழங்கப்படுவதன் பேரில், சேம வங்கியினாலோ தேசிய வங்கியினாலோ அவ்வாறு அறிவுரை வழங்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் அவ்வாறு இணைந்து தேர்வு செய்யப்பட்ட அந்நபர் அகற்றப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும்.

(21) 1949—ஆம் ஆண்டு வங்கித்தொழில் முறைப்படுத்துதல் சட்டத்தின்படி (மையச் சட்டம் X/1949) ஒரு வங்கியாகச் செயலாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளவை தவிர, தொடக்க வேளாண் கடன் சங்கமோ அதன் கூட்டமைப்போ அல்லது சங்கமோ, அதன் பதிவுபெற்ற பெயரில் "வங்கி" என்ற சொல்லுடன் அல்லது 'வங்கி' என்ற சொல்லின் மூலத்திலிருந்து தோன்றிய பிற சொல் எதனுடனும் பதிவு செய்யப்படுதலோ அல்லது அதனை அதன் பெயரின் ஒரு பகுதியாகப் பயன்படுத்துதலோ ஆகாது:

*முதலாம் வரம்புரை:* ஆனால், 1949—ஆம் ஆண்டு வங்கித்தொழில் முறைப்படுத்துதல் சட்டத்தின்படி (மையச் சட்டம் X/1949) ஒரு வங்கியாகச் செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பவை தவிர, தொடக்க நிலை வேளாண் கடன் சங்கம் அல்லது அதன் கூட்டமைப்பு அல்லது சங்கம் எதுவும், 2008—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21—ஆம் நாளுக்கு முன்னதாக அதன் பதிவுபெற்ற பெயரில் "வங்கி" என்ற சொல்லுடன் அல்லது அதன் மூலத்திலிருந்து தோன்றிய பிற சொல் எதனுடனும் பதிவு செய்யப்பட்டோ அல்லது அதனை அதன் பெயரின் பகுதியாகப் பயன்படுத்தியோ வருகிறவிடத்து, அது, அத்தகைய தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், அதன் பெயரை, அதில் 'வங்கி' என்ற சொல் அல்லது அதன் மூலப் பெயரிலிருந்து தோன்றிய சொல் எதுவுமிருப்பின், அதனை அகற்றும் வகையில் மாற்றுதல் வேண்டும்.

*இரண்டாம் வரம்புரை:* மேலும், அத்தகைய சங்கம் எதுவும், குறித்துரைக்கப்பட்டுள்ள கால அளவிற்குள் மேற்சொன்ன வகைமுறைகளுக்கு அவற்றுக்கு இணங்கி நடக்கத்தவறுகிறவிடத்து, பதிவாளர் அத்தகைய சங்கத்தை உடனடியாகக் கலைப்பதற்கு ஆணையிடுதல் வேண்டும்.

(22) இந்தப் பிரிவில் பிறவாறாக வகைசெய்யப்பட்டவாறு தவிர, இந்தச் சட்டத்தில் இருந்து வரும் வகைமுறைகள் விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிகள், இந்தப் பிரிவின் வகைமுறைகளைத் திறம்பட செயல்படுத்துவதற்குத் தேவைப்படும் இடங்களில், சேம வங்கியினால் அல்லது தேசிய வங்கியினால் வழிகாட்டு நெறிமுறைகள் அல்லது நிபந்தனைகள் வெளியிடப்படும் வரை தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருதல் வேண்டும்.

(23) குறுகிய காலக் கூட்டுறவுக்கடன் அமைப்புமுறைச் சங்கத்தில் பணி நிலைப் பிரிவு எதுவும் இருத்தலாகாது; மற்றும் அத்தகைய சங்கத்தில் பணிநிலைப் பிரிவானது ஒழிக்கப்படுதல் வேண்டும்.

(24) குறுகிய காலக் கூட்டுறவுக் கடன்அமைப்பு முறைச் சங்கம் எதற்கும் சேம வங்கியின் அல்லது, நேர்விற்கேற்ப தேசிய வங்கியின் முன் ஏற்பளிப்பு இல்லாமல் இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் பொருந்துவதிலிருந்து அரசினால் விலக்களிக்கப்படுதலாகாது.

(25) அரசோ அல்லது பதிவாளரோ, குறுகிய காலக் கூட்டுறவுக் கடன்அமைப்பு முறை சங்கம் எதற்கும் இந்த அத்தியாயாத்தின்படி கொடுக்கப்பட்டுள்ள உரிமைகள் அல்லது அதிகாரங்கள் எவற்றையும் குறைக்கும் அல்லது இந்த அத்தியாயத்தின் பிற வகைமுறைகளை எதிராகப் பாதிக்கும் விளைவைக் கொண்டிருக்கக்கூடிய எதனையும் செய்தலோ அல்லது நடவடிக்கை எடுத்தலோ அல்லது ஆணை அல்லது பணிப்புரை எதனையும் பிறப்பித்தலோ ஆகாது.

நீக்கமும் காப்பும்

தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2008

**3.** (1) 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்த) அவசரச்சட்டமானது இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர், தமிழ்ப்பிரிவு சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.